86

# குமரிமலர்

பதிப்பாசிரியர்

ஏ. கே. செட்டியார்

விலை அணா 8

மலர் 12 தமிழ்நாடு இதழ் 7

மன்மத – ஐப்பசி

# உள்ளுறை

பக்கம்

1. பேச்சு மேடை 4
2, லண்டன் மேயரின் விருந்து 15
3. காலண்டர் சீர்திருத்தம்
—ந. வ. நாயுடு 17
4. ஜகதீஸ் சந்திர போஸ்
—ஆர். பத்மநாபன் 26
5. ஆறில் ஒன்று
—"உதயன்" 31
6. தலையில்லாத குதிரை வீரன் 36
7. பரதனின் தியாகம் (2)
—சு. ராஜகோபாலன் 46
8. மக்கள் சங்கீதம் 54
9. பெரம்பூர் ரயில் பெட்டித் தொழிற்சாலை 58
10. செய்திக் கோவை 71


சுவர்ண மாளிகை
P.A.ராஜு செட்டியார் & பிரதர்
கோயமுத்தூர்
P-1-49

N. H. M.
குடை மார்க்
பனியன்கள்

TRADE MARK
REGD.NO 143200
N.H.M

N. H. M.
குடை மார்க்
பனியன்கள்

நாகரிகத்திற்கும், எழிலுக்கும், நீண்டகால
உழைப்பிற்கும் நமது குடை மார்க்குள்ள
N. H. M. பனியன்களே
சிறந்தவை.

---

தயாரிப்பாளர் :—
நியூ ஹொசைரி மேனுபாக்சர்ஸ்
தபால் பெட்டி நெ. 37
90 A, பல்லடம் ரோடு, திருப்பூர்

தந்தி விலாசம் } நியூஹொசைரி டெலிபோன் நெ. 208.


அருணகிரிவிலாஸ்
சீயக்காய் பவுடர்
N. ஆறுமுகம் பிள்ளை,
காரைக்குடி.
B.S

# பேச்சு மேடை

---

## மோட்டார் உற்பத்தி

இந்தியாவில் ஒரு மோட்டார் உற்பத்திச்சாலை ஆரம்பிப்பது சம்பந்தமாக இந்தியாவிலுள்ள சில தொழில் அதிபர்களின் சார்பாக 1935-ஆம் வருஷத்தில் அமெரிக்காவுக்குச் சென்றேன். அங்கே ஒரு திட்டம் தயாரித்துக் கொண்டு நான் திரும்பியபோது என்னை அனுப்பியவர்களுக்கு அதில் அக்கறை குறைந்துவிட்டது. அந்தத் தொழிலை அவர்கள் தைரியமாக ஆரம்பிக்கவில்லை. அப்போதிருந்த அரசாங்கமும் குறுக்கே நின்றது.

நான் அமெரிக்கா சென்றிருந்தபோது மோட்டார் உற்பத்தித் தொழிலில் பயிற்சி பெறுவதற்காக ருஷ்யாவிலிருந்து ஓர் அதிகாரியும் ஐம்பது தொழில் நுட்ப வேலைக்காரர்களும் அங்கு வந்திருந்தார்கள். அவர்கள் ருஷ்யா திரும்பியவுடன் தொழிற்சாலையை ஆரம்பித்தார்கள். இப்போது ருஷ்யாவில் மோட்டார் உற்பத்தி நல்ல நிலையில் இருக்கிறது.

வருஷத்தில் நாம் இருபத்தையாயிரம் மோட்டார்கள் இறக்குமதி செய்கிறோம். ஆகவே மோட்டாருக்கு வேண்டிய எல்லா பாகங்களையும் திட்டம்போட்டு, இந்தியாவிலேயே உற்பத்தி செய்வதுபற்றிப் பரிசீலனை செய்ய வேண்டும்.

—டாக்டர் எம். விஸ்வேஸ்வரய்யா.

ருஷ்யாவும் இந்தியாவும்

மாஸ்கோ சர்வகலாசாலைக்குச் சலவைக் கல் பதிக்கப் பட்ட பிரம்மாண்டமான கட்டிடம் இருக்கிறது. ஆனால் அங்குப் படிக்கும் மாணவர்களுக்கு இந்திய மாணவர்களைப் போல இவ்வளவு சுதந்திரமில்லை. கட்டுப்பாட்டுக்காக ஒரு குறிப்பிட்ட வழி வகுக்கப்படுவது அவசியம் என்று ருஷ்யர் வாதிக்கின்றனர். ஆனால் இந்தியாவில் சுய கட்டுப்பாட்டில் நமக்கு நம்பிக்கை இருக்கிறது. "இதைச் செய், அதைச் செய்யாதே" என்று மேலிடத்தார் திணிக்கும் கட்டுப்பாட்டில் நமக்கு நம்பிக்கை இல்லை.

இன்று ருஷ்யாவில் ஒவ்வொரு பிரஜையும் மேல் அதிகாரிகளால் வகுக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட வழியிலேயே சிந்திக்கவும் செயல் புரியவும் செய்கின்றனர். இதனால் உள வளர்ச்சிக்கு ஏற்படும் பாதகம் எப்படி நிவர்த்திக்கப்படும் என்பது ஒரு பிரச்னை.

ருஷ்ய எழுத்தாளர்களின் கதியும் இதுவேதான். புத்தகங்களை அச்சிடுவது, பிரசுரிப்பது எல்லாவற்றையும் அரசாங்கமே செய்கிறது. ஓர் ஆசிரியர் ஒரு புத்தகத்தை எழுதலாம். ஆனால் அது அதிகாரிகளுக்குப் பிடிக்கவில்லை என்றால் அந்தப் புத்தகம் வெளிவரவோ, அந்த ஆசிரியர் பிழைப்பு நடத்தவோ முடியாது. ஆகையால் இலக்கியத்தில் ஒரு விதமான நிர்ப்பந்தம் உண்டாகிவிடுகிறது. புரட்சிக்கு முன்னால் எழுதப்பட்ட ருஷ்ய இலக்கியங்களைப் படித்து ரசித்தவர்கள், ருஷ்யாவில் இப்பொழுது எழுதப் படும் புத்தகங்களைப் படிக்க முடிவதில்லை.

இந்தியா தனக்கென ஒரு வழியை வகுத்துக் கொண்டிருக்கிறது. இதன் முன்னேற்றத்தின் வேகம் குறைவாக இருக்கலாம். ஆனால் பலர் நினைக்கும் அளவுக்குக்

குறைவாக இல்லை. ருஷ்யா கூட இப்பொழுதுள்ள நிலைமையை அடைய நீண்ட காலம் பிடித்தது.

நம் தேச நிர்மாணத்தில் மாணவர்களுக்கு முக்கிய பங்கு உண்டு. பல கம்யூனிஸ்டு நாடுகளில் மேலிடத்து அதிகாரிகள் மாணவர்கள்மீது நிர்ப்பந்தம் பிரயோகிக்கின்றனர். ஆனால் இதன் பலன் உற்சாக மூட்டுவதாக இல்லை. நிர்ப்பந்தத்தின் காரணமாகச் செய்யப்படும் எந்த வேலையும் நன்றாக இருப்பதில்லை.

'நம் சாதனைகளுக்கு நாம் விலை கொடுக்க வேண்டும்' என்று காந்தியடிகள் சொல்லுவதுண்டு. ருஷ்யர், தம் சாதனைகளுக்குப் பெரும் 'விலை' கொடுத்தனர். அங்கு ஆயிரக்கணக்கான மக்கள் மடிந்தனர்; கஷ்டப்பட்டனர்; இன்னமும் கூட ஓரளவு கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கின்றனர். வசிப்பதற்குப் போதிய வீடுகளில்லை. மக்கள் இதனால் படும் கஷ்டம் மிகக் கடுமையானது. அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருள் பஞ்சம் காரணமாக, கடைகளுக்கு முன்னால் ஜனங்கள் நீண்ட 'கியூ' வரிசைகளில் நின்று கொண்டிருக்கின்றனர்.

இந்தியாவைப் போல, வேறு எந்த நாட்டிலும் பெண்கள் பெரிய பொறுப்பு வாய்ந்த பதவிகளை இந்த அளவுக்கு வகிப்பதில்லை.

—ஸ்ரீமதி இந்திரா காந்தி

வெள்ளமும் வரப்பிரசாதமே

எதிர்பாராத வெள்ளங்களைத் தடுக்க அணைகளும் கரைகளும் கட்டுவது அசட்டுத்தனம். மக்களைச் சுற்றிப் பாதுகாப்புச் சுவர் எழுப்புவதைவிட, அவர்கள் மனோ பலத்தை உயர்த்துவதுதான் முக்கியம். வெள்ளத்தைப் பற்றிப் பரபரப்பு ஏன் என்பது எனக்கு விளங்கவில்லை. இந்த விபரீதத்தை வரப்பிரசாதமாக மாற்றிவிடுங்கள்.

லட்சக் கணக்கான வருஷங்களாக வெள்ளம் அடிக்கடி வந்திருக்கிறது. உண்மையில் ஒரிஸ்ஸாவின் தற்பொழுதைய நிலைமைக்குக் காரணம், வண்டல் மண்ணை அடித்துக் கொண்டுவரும் வெள்ளங்கள்தான் என்று கூறலாம். இந்த வண்டல் மண் படிந்து நிலவளம் அதிகரிக்கிறது. ஆகையால் வெள்ளங்கள் ஒரு புறம் தீங்கு விளைவித்தாலும், மற்றொரு புறம் மிகவும் உபயோகமான காரியத்தைச் செய்கின்றன. நைல் நதியின் வெள்ளங்களால்தான் எகிப்து ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஜீவித்திருக்கிறது.

மழை அதிகமாகப் பெய்வதையோ, குறைவாகப் பெய்வதையோ கட்டுப்படுத்த இதுவரை ஒருவராலும் முடியவில்லை. அதிக மழையினால் ஏற்படக்கூடிய கஷ்டங்களைக் குறைப்பது ஒன்றுதான் சாத்தியம்.

வெள்ளத்தினால் வீடுகளும் பயிர்களும் அழிந்தாலும் அடுத்த அறுவடையில் அதிக மகசூல் கிடைக்கிறது. வெள்ளத்தைத் தடுப்பது விரும்பத்தக்கதுதானா என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. அப்படித் தடுத்தால், நிலங்களில் செழிப்பான வண்டல் மண் வந்து படிவதைத் தடுத்தவர்களாவோம்.

ஆனால் வீடுகளைப் பாதுகாப்பது அவசியம். வீடுகளை உயரமான இடங்களில் கட்டவேண்டும்.

ஆறுகளின் இரு கரைகளிலும் சுவர்கள் கட்டி, அவை சமுத்திரத்தில் போய் விழும்படி செய்வது அசட்டுத்தனம். வெள்ளம் விளைவிக்கும் தீமையைவிட இதனால் அதிக துன்பம் ஏற்படும். அமெரிக்காவைவிடப் பணக்கார நாடு வேறில்லை. ஆனால் அங்கு வெள்ளம் தடுக்கப்படவில்லை.

—பண்டித ஜவாஹர்லால் நேரு.

## இமயம் முதல் குமரி வரை

இமயம் முதல் குமரி வரை பிரிக்க முடியாத ஒரு நாடு நம் தாய் நாடு என்பதை நாம் எல்லோரும் உணர வேண்டும். நம் நாட்டில் உள்ள ஒவ்வொரு அங்குல நிலமும்-அவன் எங்கு இருந்தாலும்-ஒவ்வொரு இந்தியனுக்கும் சொந்தமானது. இந்தப் பண்டைய நாடு, உலக வரலாற்றில் முக்கியத்துவம் பெற்ற பங்கைச் செய்ய இருக்கிறது. இந்தப் புனித ப்ாரம்பரியத்தைப் பாதிக்கக் கூடிய எதையும் நாம் செய்யக் கூடாது. நம் மக்களின் அழியாத உணர்ச்சியும், பண்பாடும்தான் நம் நாட்டின் ஒற்றுமைக்கு ஆதிகாலம் தொட்டு இணைப்புச் சக்தியாக இருந்து வருகிறது.

—நீதிபதி ராமசாமிக் கவுண்டர்.

## மண்ணும் பானையும்

ஆதாரக் கல்வியில் புத்தகப் படிப்புக்கு மகத்துவம் இல்லை; ஆகையால் அறிவைப் புறக்கணிப்பதாக அர்த்தமில்லை. ஆதாரக் கல்வியில் வாழ்க்கைக்குத் தேவையான எல்லா அடிப்படைப் பொருள்களின் முழு அறிவும் பெறுதல் வேண்டும். நீண்ட வரலாறுகள், வீணுக அரசர்களின் பெயர் பட்டியல் முதலியவற்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. இதனுல் மாணவர்கள் மீது வீணான சுமை ஏற்றப்படுகிறது. ஆனால் வாழ்க்கையின் எந்த அடிப்படையான கருத்து நம்முடைய வாழ்வை மலரச் செய்கிறதோ, அந்த அறிவு அவசியம். சமூக அறிவியல், மனித சமுதாயத்தின் முழு வரலாறு ஆகியவை பற்றிய அறிவும் அவசியமே. விஞ்ஞானத்தின் அடிப்படைக் கருத்தும் மாணவர்களுக்குத் தெரிய வேண்டும். சுகாதாரம், உணவு, சுத்தம், சமையல் ஆகிய வரைமுறைகளின் சிறந்த அறிவும் தேவை.

இந்த விதமாக ஆதாரக் கல்வியில், கல்வி அறிவுக்கு எத்தகைய குறைவும் இருக்கக் கூடாது. மொழி அறிவு தன்னுடைய எண்ணங்களைச் சரியான—அழகிய முறையில் வெளியிடும் கலை, இலக்கிய அறிவு முதலியனவும் வேண்டும். ஆதாரக் கல்வித் திட்டத்தில் அறிவுக்குக் குறைவிருக்காது; ஆனால் வீணான அறிவும் ஏற்படாது.

அறிவும் வேலையும் ஒன்றாக இணங்கவேண்டும். மண்ணும் பானையும் சேர்ந்து மண்பானையாகிறது. மண்ணுக்கும் பானைக்கும் என்ன சம்பந்தம் என்று சொல்லுவது மிகவும் கடினம். பானையும் மண்ணும் வேறுபட்ட இரண்டு பொருள்களா? அல்லது ஒன்றா? நீங்கள் தனித்தனி என்று கூறினீர்களானால், உங்களுடைய பானையை எடுத்துக் கொண்டு என்னுடைய மண்ணை இங்கேயே போட்டு விடுங்கள் என்று கூறுவேன். ஆனால் இரண்டு பொருள்களும் ஒன்றை ஒன்று பிரிக்க முடியாத அளவுக்குச் சேர்ந்திருக்கிறது. எங்கு மண் கிடைக்கிறதோ அங்கு பானையும் இருக்கிறது. நீங்கள் இரண்டையும் ஒன்றுதான் என்று கூறினால், "இதோ மண் இருக்கிறது; இதில் தண்ணீரை நிரப்பி எடுத்துப்போங்கள்" என்று சொல்லுவேன். இதுவும் நடக்க முடியாதது. இதை வேறு வேறாகவும் சொல்ல முடியாது; ஒன்றாகவும் கூற முடியாது. இந்த உறவுக்குத் தான் கூட்டுறவு என்று சொல்லுகிறோம். எந்தக் கல்வியில் அறிவு—வேலை இரண்டையும் தனித்தனியே பிரித்துக் கூற முடியாதோ அதுவே ஆதாரக் கல்வி.

இராமர், விஸ்வாமித்திரரின் யாகத்தைக் காக்க அவருடைய ஆசிரமத்துக்குச் சென்றபொழுது, அவருக்கு அறிவும் கிடைத்தது; யாகத்தைக் காக்கும் வேலையும் கிடைத்தது. அறிவும் வேலையும் ஒன்று சேர்ந்து இயங்க

வேண்டும். அறிவின் வழியே வேலையும், வேலையின் மூலமாக அறிவும் மலர்ச்சியுற வேண்டும். இதுவே நம்முடைய ஆதாரக் கல்வி முறை.

—ஆசார்ய விநோபா.

காந்தியடிகள்

காந்தியடிகள் இந்திய அரசியல் வானில் தோன்றிய பின்னர்தான் இந்திய தேசீய இயக்கம் பரவ ஆரம்பித்தது. அதற்கு முன் தலைவர்கள் எவ்வளவோ பேர் இருந்தார்கள். ஆனால் காந்தியடிகள் வந்த பின்னர்தான் பலன்களைக் காண ஆரம்பித்தோம். அவர் மகத்தான ஒரு தலைவர், போர் வீரர், சேனாதிபதி. சாத்வீகமான இந்தியப் படைக்குத் தலைமை தாங்கி நடத்திய சாத்வீக தளபதி. செய்கையில் மட்டும் சாத்வீகமல்ல; மனத்தாலும் கூட பலாத்காரத்தை நினைக்காத சாத்வீகப் போர் வீரர் காந்தியடிகள். யாரைப் பற்றியும் மனத்தில்கூட அவர் தீங்கு நினைத்ததில்லை. போர் வீரர் என்றால் சாதாரணமானவர் அல்ல. கண்டிப்பான ஒழுங்கு, கட்டுப்பாடுகளைச் செயலில் நடத்தியவர்.

சென்ற நாற்பது ஆண்டுகளில் நடந்தவைகளை நினைத்துப் பாருங்கள். எத்தனை தடவை அவர் தமது சட்டமறுப்பு இயக்கங்களைத் திடீர் என்று நிறுத்தியிருக்கிறார். ஏன்? யாரோ கட்டுப்பாடில்லாமல் நடந்து கொண்டு விட்டார்கள் என்பதற்காகத்தான். பெரிய லட்சியங்களுக்காகவே அவர் போராடினார். நாட்டிலுள்ள முப்பத்தாறு கோடி மக்களும் விடுதலைபெற வேண்டுமென்று அவர் விரும்பினார். வெறும் விடுதலை மட்டுமல்ல; இந்திய மக்கள் தைரியம், கட்டுப்பாடு ஆகியவைகளில் தேர்ச்சி பெற்றுத் தலை நிமிர்ந்து நடக்க வேண்டுமென்று அவர் விரும்பினார்.

நாட்டிலுள்ள ஏழை மக்களுடன் அவர் தம்மை ஐக்கியப் படுத்திக் கொண்டார். ஏழையுடன் ஏழையாக வாழ்ந்தார். அவர் அணிந்த ஆடையும், நடத்திய வாழ்க்கையும் ஏழ்மையையே சுட்டிக் காட்டின. ஏழையின் வறுமை நீங்கவேண்டும். அத்துடன் அவன் முதுகெலும்பு உள்ள மனிதனுக மாற வேண்டும் என்பதே அவருடைய கனவு.

ஆரம்ப காலத்தில் நான் எப்படி யிருந்தேன் என்பதையும் கூற விரும்புகிறேன். காந்தியடிகளின் செய்தி 1920-ஆம் ஆண்டில் உத்தரப் பிரதேசத்திலுள்ள எங்களுக்கு எட்டியது. ஆயிரக்கணக்கானவர்கள் அவருடைய செல்வாக்கின் கீழ் வந்தார்கள். அப்படி அதில் ஈடுபட்டவர்களில் நானும் ஒருவன். அப்பொழுது எங்களுக்கு இருந்த ஆர்வத்தில் எல்லாவற்றையும் மறந்து விட்டோம். அன்றாட வேலைகளை மறந்தோம்; குடும்பங்களைக்கூட மறந்துவிட்டோம். காந்தியடிகளின் இயக்கம் எங்களுக்கு ஒரு விதமான போதையை அளித்தது. கிராமங்களுக்குச் சென்று இச் செய்தியைப் பரப்பினேம். நாங்கள் இங்கிலாந்தில் கல்வி பயின்று, அந்தச் சூழ்நிலையில் வந்தவர்கள். ஆனல் அப்பொழுது காந்தியடிகளின் செய்தியுடன் கிராமங்களுக்குச் சென்ற பொழுது ஏழைகளைக் கண்டோம். இந்த ஏழைகளை யாராவது திரும்பிப் பார்த்தார்களா? அவர்களைத் திரணமாக மதித்து நடத்திக் கொண்டிருந்தார்கள். குழிவடைந்த கண்களுடன், எல்லா நம்பிக்கைகளையும் இழந்து சோர்வுற்றிருந்த ஏழைகளைக் கண்டோம்.

"பயப்படாதீர்கள். எதைக் கண்டு பயப்படுகிறீர்கள்? நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒற்றுமையுடனும் கட்டுப்பாடுடனும் வேலை செய்தால் எதற்குப் படப்படவேண்டும்? என்ன நேர்ந்துவிடப் போகிறது? சிறையில்

தள்ளுவார்கள்; சுடுவார்கள். அவ்வளவுதானே?" என்ற காந்தியடிகளின் செய்தியை கிராமம் கிராமமாகப் பரப்பினேம். இது மின்னல் வேகத்தில் பரவியது. நம்பிக்கை இழந்திருந்த மக்களிடையே ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டது.

முதல் சத்தியாக்கிரக இயக்கம் எனக்கு இன்னும் நன்ருக நினைவிருக்கிறது. ஆகா! அன்றுதான் என்ன உற்சாகம்! என்ன ஆனந்தம்! 1921-ஆம் ஆண்டில் ஆயிரக்கணக்கானவர் சிறை சென்றனர்.

திடீரென்று இயக்கத்தை நிறுத்திவிட்டதாக காந்தியடிகள் தெரிவித்தார். ஏன்? சௌரிசௌராவில் யாரோ சிலர் போலீஸ்காரர்களைத் தாக்கிஞர்களாம் அதனுல் நிறுத்திவிட்டார். அப்போது நாங்கள் லட்சுமணபுரிச் சிறையில் இருந்தோம். யாரோ சில அறியாதவர்கள் என்னவோ செய்தார்கள் என்பதற்காக ஒரு பெரிய இயக்கத்தை நிறுத்துவதா? இதென்ன அர்த்தமில்லாமல் இருக்கிறதே என்று ஆத்திரப்பட்டோம். கோடிக்கணக்கான மக்கள் உள்ள நாட்டில் பூரண கட்டுப்பாட்டை எதிர்பார்த்தால் எந்த இயக்கமும் வெற்றி பெருது என்று நினைத்தோம்.

ஆனுல் காந்தியடிகளின் முடிவுதான் சரியானது என்று பின்னர் உணர்ந்தோம். எங்களைவிட அவர்தான் விவேகி என்பதை அனுபவத்தில் உணர்ந்தோம். அவர் திறமை மிக்க சேனுதிபதி. மக்களிடையே கட்டுப்பாடு இல்லை என்பதை அவர் உணர்ந்தார். தமது சொல்படி இயக்கம் நடத்தப்படவில்லை என்பதை அறிந்ததும் இயக்கத்தை நிறுத்திவிட்டார். இதனுல் விபரீதம் ஏற்படும் என்பதை அவர் உணர்ந்தார்.

சாத்வீகத்தையும் பலாத்காரத்தையும் கலக்கக்கூடாதென்பதில் அவர் உறுதியாய் இருந்தார். இரண்டையும்

கலந்தால், ஒன்றை ஒன்று அழித்துவிடும். அதனால் ஒரு பலனும் ஏற்படாது. ஆயுதமில்லாத மக்கள் பலாத்காரத்தில் ஈடுபடுவதென்றால் அது நம்மை அழித்துவிடும். கட்டுப்பாடு சரியாக இல்லை என்று தோன்றியபோதெல்லாம் காந்தியடிகள் இயக்கத்தை நிறுத்திக் கொண்டிருந்தார். சாத்வீகப் படை போருக்குப் புறப்படத் துடித்துக் கொண்டிருக்கும். ஆனால் எங்கேயாவது சிறு தவறு தென்பட்டாலும் 'நில்' என்று உத்தரவிட்டுவிடுவார்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் காந்தியடிகள் தமது தண்டி யாத்திரையை ஆரம்பித்தார். கடற்கரையில் போய் உப்பு எடுக்கவேண்டும் என்று சொன்னார். உப்பு எடுப்பதா? என்ன அர்த்தமில்லாமல் இருக்கிறதே என்று பலர் நினைத்தோம். வீரத்தனமாக ஏதாவது செய்யவேண்டுமென்று நினைத்தோம். கூச்சல் போட வேண்டும்; கொடிகளுடன் ஆர்ப்பாட்டம் செய்யவேண்டும் என்றெல்லாம் விரும்பினோம். அப்படியிருக்க 'உப்பு எடுங்கள்' என்று காந்தியடிகள் கூறியபொழுது, எங்கள் வேகம் குறைய ஆரம்பித்தது. ஆனால் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவர்கள் என்ற முறையில், அவர் சொன்னபடியே உப்பு எடுத்தோம். தண்டியை நோக்கி அவர் சென்று கொண்டிருந்தபொழுது, இந்தியாவின் சூழ்நிலையே மாறிவிட்டது. கட்டுப்பாடான முறையில் இந்தியா முழுவதும் உப்புச்சட்டம் மீறப்பட்ட விதம் வியக்கத்தக்கதாக இருந்தது. இதென்ன அர்த்தமில்லாத இயக்கம் என்று நினைத்தது, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அஸ்திவாரத்தையே உலுக்கி விட்டது.

முப்பத்தாறு கோடி மக்கள் நினைத்ததையும் காந்தியடிகளால் எண்ணிப் பார்க்க முடிந்தது. 1942-ஆம் ஆண்டில் ஒரே ஒரு மனிதரைக் கொண்டு சத்தியாக்கிரகம் செய்யவேண்டுமென்று அவர் முடிவு செய்தார்.

உலக யுத்தம் நடந்துகொண்டிருந்த சமயத்தில் ஒரு தனி மனிதர்—விநோபாஜியைக் கொண்டு சத்தியாக்கிரகம் செய்ய முடிவு செய்தார். இந்தத் தனிமனிதர் சத்தியாக் கிரகம் செய்தால் உலகமா முழுகிப்போகும் என்று பலர் ஆச்சரியப்பட்டார்கள். இதனால் ஏதாவது நன்மை கிடைக்குமா என்று திகைத்தார்கள். இரண்டாவதாக சத்தியாக்கிரகம் செய்யும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. இந்தத் தனி நபர் சத்தியாக்கிரகம் மக்களிடையே சுதந் திரக் கனலை மூட்டியது. இது ஒரு புரிந்து கொள்ளாத புது வழியாக இருந்தது. ஆனால் இந்த சத்தியாக்கிரகத் தில் மருந்துக்குக் கூட ஒழுங்கீனம் இல்லை.

காந்தியடிகளின் தலைமையில், அவருடைய நிழலில் நாம் வாழ்ந்தோம். அவர் நம்மைக் கட்டுப்பாடு உடையவர் களாகச் செய்தார். அவருடைய சீரிய தலைமையில் இறுதி யில் சுயராஜ்யம் பெற்றோம். கட்டுப்பாடு இருந்த தாலேயே சுயராஜ்யம் பெற முடிந்தது.

—ஜவாஹர்லால் நேரு.

# லண்டன் மேயரின் விருந்து

லண்டன் நகரத்தின் முதல் பிரஜையான நகரசபைத் தலைவர் ஆண்டுதோறும் நகரத்திலுள்ள வர்த்தகர்களுக்கும் பாங்கி அதிபர்களுக்கும் விருந்தளிப்பது வழக்கம். நகரப் பிரமுகர்களும் மந்திரிகளும் இந்த விருந்தில் கலந்து கொள்வார்கள். இதில் முக்கியமான அம்சம் நிதிமந்திரி கலந்து கொள்வதுதான். உபசரிப்பின்போது சர்க்காரின் நிதி-பொருளாதாரக் கொள்கைகளைப் பற்றி நிதி மந்திரி பேசுவதுண்டு. சென்ற பல ஆண்டுகளாக இந்தச் சம்பிரதாயம் கடைப்பிடிக்கப்படுவதால் மேயரின் விருந்துக்குத் தனி மதிப்பு ஏற்பட்டுவிட்டது.

நிதிக் கொள்கைகளை மட்டுமே மந்திரி எடுத்துச் சொல்லுவார் என்பதில்லை. 1911-ல் நடந்த விருந்தில் கலந்துகொண்ட நிதி மந்திரி டேவிட் லாயிட் ஜார்ஜ் சர்க்காரின் வெளிநாட்டுக் கொள்கையைப்பற்றிக் காரசாரமாகப் பேசினர். அகதி சம்பவத்தைக் குறிப்பிட்டு விட்டு, தங்களுடைய உரிமைகளைக் காக்க, பிரிட்டனும் பிரான்ஸும் போர் முனையில் ஜெர்மனியைச் சந்திக்கத் தயாராக இருப்பதாகக் கூறினர். வெளிநாட்டு விவகார மந்திரியுடன் ஆலோசனை செய்தபின்தான் அவர் இப்படிப் பேசினர்.

இவ் ஆண்டு விருந்தில் ஸ்ரீ ஆர். ஏ. பட்லர் கலந்து கொண்டு, சர்க்காரின் பொருளாதாரக் கொள்கையைப் பற்றிச் சொற்பொழிவாற்றினர்.

இங்கிலாந்து பாங்கியின் தலைவரும் விருந்தில் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றுவார். ஆனால் இவரும் நிதி மந்திரியும் கலந்து பேசிக் கொண்டு பொதுப் பிரச்னைகளைப் பற்றிப் பேசுவதில்லை. சில சமயங்களில் சர்க்காரை எதிர்த்துப் பேசக்கூடிய நிலையும் ஏற்பட்டிருக்கிறது. உதாரணமாக, கடன் வசதியைக் கட்டுப்படுத்த சர்க்கார் எடுத்துக் கொண்ட நடவடிக்கை தீவிரமாக இருப்பதாக விருந்தில் கலந்து கொண்ட இங்கிலாந்து பாங்கிக் கவர்னர் கூறினார். சர்க்காருக்குச் சூடு கொடுப்பதாக இதை எடுத்துக்கொள்ளக் கூடாது. சர்க்கார் பாங்கி என்றாலும் பொருளாதார-நிதி விவகாரங்களில் தன்னுடைய கொள்கையை உருவாக்கிக் கொள்ளும் உரிமை இங்கிலாந்து பாங்கிக்கு உண்டு.

வேறு ஒரு விதத்திலும் இந்த விருந்து முக்கியத்துவம் வாய்ந்தது. நிதி மந்திரி நகரசபைத் தலைவர் (மேயர்), இங்கிலாந்து பாங்கித் தலைவர், பங்கு மார்க்கெட்டின் தலைவர் ஆகியோர்களும் மற்றப் பிரமுகர்களும் நிதி-பொருளாதாரத் துறைகளில் தம்தம் கொள்கைகளை எடுத்துக் கூறும் வாய்ப்பு இங்குக் கிடைக்கிறது. அதனால் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வது எளிதாகிறது. மேலும் உலகப் பொருளாதாரத்தில் லண்டன் நகரம் முக்கிய ஸ்தானம் வகிப்பதைக் கொண்டாடும் விருந்தாகவும் கொள்ளலாம். லண்டன் மேயர் அளிக்கும் விருந்தில் நிதி மந்திரியும் வர்த்தக உலகப் பிரமுகர்களும் கலந்துகொண்டு தேச சுபிட்சக் கொள்கையை உருவாக்குகிறார்கள். அதன் மூலம் உலக வாணிபத்தைப் பற்றியும் சிந்திக்கிறார்கள்.

# காலண்டர் சீர்திருத்தம் *

ந. வ. நாயுடு

இந்தியாவில் ஏறக்குறைய 30 வகை காலண்டர்கள் நடைமுறையில் இருக்கின்றன. நம் நாட்டு வரலாற்றில் குறிப்பிடத் தக்க நிகழ்ச்சிகளையோ, வானில் தென்படும் நட்சத்திரம் கிரகங்களின் நிலைமையையோ ஒட்டி, ஆண்டின் தொடக்கமும், ஆண்டு எண் தொடக்கமும் உண்டாயின. பல நிகழ்ச்சிகளும் பல வான் நிலைகளும் நாளடைவில் பல வகைத் தொடக்கமுள்ள ஆண்டுகளுக்கும் அவற்றின் எண்ணுக்கும் காரணமாயின.

நம் நாட்டில் இன்று வழங்கும் காலண்டர்களில் குறிப்பிடத்தகுந்தவை.

| | | | |
|---|---|---|---|
| கலி ஆண்டு | 5057 | தொடக்கம் | மார்ச் 25, 1955 |
| விக்கிரம | 2013 | ” | ” சென்னை<br>நவம்பர் 15, குஜராத் |
| சாலிவாகன | 1878 | ” | மார்ச் 25, |
| கொல்லம் | 1131 | ” | ஆகஸ்டு 17, தென் மலையாளம்,<br>செப்டம்பர் 17, வட மலையாளம், |
| ஹிஜிரி | 1375 | ” | ஆகஸ்டு 20, |
| பஸலி | 1365 | ” | ஜூலை 1, |
| மன்மத | | | ஏப்ரல் 14, |

* வானொலிப் பேச்சு; இசைவு பெற்றது.

வெவ்வேறு சகாப்தங்களின் தொடக்கக் காரணங்கள் இன்று நமக்குத் தெரியவில்லை. விக்கிரமாதித்தன், சாலிவாகன் போன்ற மன்னர்கள், முகமது, கிறிஸ்து போன்ற மத ஸ்தாபகர்கள் ஆகியோருடைய பிறப்பு, இறப்பு, ஆட்சி போன்றவற்றை, சகாப்தத்தின் தொடக்கமாக மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். எல்லா சகாப்தங்களுக்கும் சரித்திரச் சான்று உண்டெனை ஒப்புக்கொள்ளுவதற்கில்லை.

ஆண்டின் தொடக்கம் பெரும்பாலும் சூரிய சந்திரர்களின் கதியையும், அதனால் உண்டாகும் வெப்ப, தட்ப, மழை, காற்று முதலிய பருவ நிலையையும் ஒட்டி ஏற்பட்டது. சூரியன் வடக்கு நோக்கி வருங்கால் கோளத்தின் இடைவட்டத்தைத் தாண்டும் நாளை, அதாவது வேனிற் காலத்திற்கு முன்பு பகல் இரவுகள் சம அளவு உடையனவாக இருக்கும் நாளை, ஆண்டின் முதல் நாளாக நம் நாட்டின் பல காலண்டர்கள் ஏற்றுக்கொள்கின்றன. இன்றைய நிலையில் அந்நாள் மார்ச் 21-ந் தேதியாகும். பல நூற்றாண்டுகளுக்கு முன்பு அந்நாள் மார்ச் 25 ஆகவும், மேலும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு அந்நாள் ஏப்ரல் 14 ஆகவும் இருந்தது.

அவ்வாறே சூரியன் கோளத்தின் இடைவட்டத்தைக் கடந்த பின் மேஷ ராசியில் வரும் முதல் அமாவாசையோடு தெலுங்கு ஆண்டும், துலா ராசியில் வரும் முதல் அமாவாசையோடு குஜராத்தி ஆண்டும் தொடங்கும்.

சூரியனுடைய் கதியை அடிப்படையாகக் கொண்ட ஆண்டும் மாதங்களும் தமிழ்நாடு, மலையாளம், ஒரிஸா, வங்காள நாடுகளில் நடைமுறையில் இருக்கின்றன. சந்திரனுடைய கதியை அடிப்படையாகக் கொண்ட மாதமும், சூரியனை அடிப்படையாகக் கொண்ட ஆண்டும் நம்

நாட்டின் பிற இடங்களில் பயில்கின்றன. (ஹிஜிரி என்ற முகம்மதிய ஆண்டு மட்டும் முற்றிலும் சாந்திராயனம்.) சூரியனை அடிப்படையாகக் கொண்ட மாதத்தின் பெயர்கள்கூடப்பெரும்பாலும் அம்மாதத்தில் பௌர்ணமியன்று சந்திரனைச் சார்ந்திருக்கும் நட்சத்திரத்தின் பெயரே ஆகும். சித்திரை மாதத்தில் பௌர்ணமி சித்திரை நாளிலும், வைகாசி பௌர்ணமி விசாகத்திலும் பெரும்பாலும் வருமென்பதை ஒட்டி அம்மாதங்களின் பெயர்கள் உண்டாயின என்பர்.

நம் நாட்டு காலண்டர்கள் சரித்திர காலத்திற்கு முற்பட்ட காலத்திலேயே உண்டாகியிருந்தன. அவற்றில் சிறப்பாக வழங்கியதும், இன்னும் வழக்கத்தில் உள்ளதும் 6-ம் நூற்றுண்டில் ஆரியபட்டர் வகுத்த சூரிய சித்தாந்தம். ஏழாம் நூற்றுண்டில் வழக்கத்தில் இருந்த பல காலண்டர்களை ஆராய்ந்து, அவற்றை பஞ்ச சித்தாந்தங்களாக வரையறுத்து, நாள், திதி, வாரம், நட்சத்திரம், ஆகிய பஞ்சாங்கமாக உண்டாக்கியவர் 7-ம் நூற்றுண்டில் வாழ்ந்த வராஹமிஹிரர். சூரிய சித்தாந்தத்தின்படி சூரியன் கோளத்தின் இடைவட்டத்தைத் தாண்டுவதற்கிடையில் 365·2587 நாட்களாகின்றன. அயனம்ஸ மாறுதலால் இதில் உள்ள தவறு ஆண்டுக்கு 24 நிமிஷங்கள் என்பதை 10-ம் நூற்றுண்டில்தான் அறிந்தனர். ஆயினும், சூரிய சித்தாந்தம் தொடர்ந்து வழக்கத்தில் இருந்ததால், இன்று நாம் ஆண்டின் தொடக்கமாகக் கருதும் ஏப்ரல் 14-க்கு 23 நாட்கள் முன்னரே அதாவது மார்ச் 21-ல் சூரியன் இடைவட்டத்தைக் கடந்து மேஷ ராசியில் பிரவேசித்து வருகிறுன்.

அவ்வாறே கார், வேனில் போன்ற பருவங்களும் சில நாட்களுக்கு முன்னும் பின்னும் வருகின்றன. பொங்கல் போன்ற அறுவடை விழாக்களும், கார்த்திகை

போன்ற மாரிக் கால விழாக்களும் அவற்றின் காரண மாகிய நிகழ்ச்சிகளுக்குப் புறம்பாகின்றன.

பல காலண்டர்கள் இருப்பதால் நாட்டின் ஓரிடத்தி லுள்ள ஓய்வு நாட்கள் வேறிடத்தில் வேலை நாட்களாக வும், விழாக்கள் வெவ்வேறு சமயங்களிலும் அமைகின் றன. தொழில் அலுவல்களும், அரசாங்க அலுவல்களும் ஓரிடத்தினின்று மற்றோரிடத்தில் வேறுபடுகின்றன. சூரிய சித்தாந்த மாதங்கள் 29 முதல் 32 வரை தொகை உள்ள நாட்களைக் கொண்டவை. ஒரு மாதத்தில் உள்ள நாள் தொகையும் ஆண்டுதோறும் மாறக் கூடியது.

இனி உலக அரங்கில், சிறப்பாக மேனாடுகளில், நடைமுறை காலண்டர்களைக் கவனிப்போம்.

கிறிஸ்துவின் பிறப்பிலிருந்து ஆண்டு எண் கணிக் கப்படுவது அனைவரும் அறிந்ததே.

மாதங்களும் அவற்றுக்குரிய நாட்களும் ஜூலியஸ் ஸீஸரால் கி. மு. 45-ல் வரையறுக்கப்பட்டன என்பர். இக் கணக்கில் அயனம்ஸ மாறுதலால் ஏற்பட்ட தவறால் குறைந்த 10 நாட்களை 1582-ல் போப் கிரகரி என்பவர் கூட்டியதுடன் இப்போதுள்ள லீப் ஆண்டு முறையை யும் ஏற்படுத்தினர்.

ஆயினும் 28 முதல் 31 வரை நாள் தொகையுள்ள மாதங்கள், 90 முதல் 92 வரை நாள் தொகையுள்ள கால் ஆண்டுகள் பல கணக்குகளுக்குப் பொருந்துவதில்லை. மாதம் எத்தனை நாட்களைக் கொண்டதாயினும் அத்தனை நாட்களும் அம் மாத ஊதியத்தைக் கொண்டுதானே வாழ்க்கை நடத்த வேண்டும்? மாத ஊதியத்தினின்று நாட் செலவை அறிவதற்கும்,மாத வாடகை அல்லது வட் டியிலிருந்து நாள் வாடகை அன்றி வட்டி அறிவதற்கும் இத்தகைய வெவ்வேறு நாள் தொகையுள்ள மாதங்கள்

ஒவ்வா. கடைகளில் விற்பனையையும் இயந்திரசாலைகளில் உற்பத்தியையும் முன்கூட்டி அறிவதற்கு எத்தனை நாட்கள் கொண்ட மாதம் என்பதைப் பற்றியும் எண்ண வேண்டும். எத்தனை விடுமுறை நாட்கள் என்பதும் தெரிய வேண்டும். அம்மாதத்தில் எத்தனை சனி, ஞாயிற்றுக் கிழமைகள் இருக்கின்றன என்பதும் ஒரு கேள்வி.

உற்பத்திக்கும் மூலப் பொருள்களுக்கும், கூலிக்கும் இலாபத்திற்கும், வட்டிக்கும் விற்பனைக்கும் சரிக்கட்ட காலண்டரை அடிக்கடி பார்ப்பது அவசியமாகிறது.

ஒரு மாதத்தில் குறிப்பிட்ட தேதி ஒரே கிழமையில் ஆண்டுதோறும் வருவதில்லை. கிழமையை அறிய காலண்டர் தேடுவது அவசியமாகிறது. முன்கூட்டியே பிறப்பு, இறப்பு, மண நாட்களை அறிய இயலாது போய் விடுகிறது.

ஒரே அளவுள்ள மாதம், கால் ஆண்டு, ஆண்டு இருந்தால் இத்தொல்லைகள் பெரும்பாலும் தீர்ந்துவிடு மல்லவா?

ஆக, 1923-ல் பழைய உலக சமுதாய அரங்காகிய "லீக் ஆப் நேஷன்ஸி"ல் சில கருத்துக்கள் தோன்றின.

(1) 5 நாட்களையுடைய 73 வாரங்கள் கொண்ட ஆண்டு.

(2) 7 நாட்களையுடைய 4 வாரங்கள் கொண்ட மாதமும், 13 மாதங்களைக் கொண்ட ஆண்டும் இறுதி விடுமுறை நாளும்,

(3) 3 மாதங்களையும் 91 நாட்களையும் கொண்ட 4 சம கால் ஆண்டுகள், இறுதி விடுமுறை நாள்.

இவற்றில் மூன்றுவதை 14 நாடுகள் ஏற்றுக்கொண்டன. எனினும் மக்களுள் பெரும்பான்மையோர் காலண்டர் சீர்திருத்தத்தைப் பற்றிக் கவலை கொண்டதாகத் தெரியவில்லை. கிறிஸ்துவர் நோன்பு நாளாகிய ஈஸ்டர் ஞாயிற்றுக் கிழமையை உறுதிப்படுத்துவதே இக் காலண்டர் சீர்திருத்தத்தின் முக்கிய நோக்கமாக அப்போது இருந்தது. இக்கருத்து நிறைவேறுமற் போகவே 1928-ல் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் ஈஸ்டர் நிர்ணயிப்பு சட்டம் நிறைவேறிற்று.

1953-ல் புது உலக சமுதாய அரங்காகிய "யுனைடெட் நேஷன்ஸி"ல் இந்தியா இக் கருத்தை மறுபடியும் முன் கொணர்ந்தது. அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

இந்நிலையில் நம் நாட்டில் வழக்கத்தில் உள்ள காலண்டர்கள் பலவற்றையும் ஆராய்ந்து, நாடு முழுவதற்கும் ஏற்ப சரியானதொரு காலண்டரை நிறுவுவதற்காக, டாக்டர் மேகநாத ஸாஹா தலைமையில் இந்திய அரசாங்கம் ஒரு கமிட்டியை ஏற்படுத்தியது. அக்கமிட்டி மக்கள் பழக்க வழக்கங்களையும், விழாக்களையும் ஒட்டி சில தற்காலிகமான முடிவுகளை வெளியிட்டுள்ளது. அவை:—

(1) ஆண்டு 365·2422 நாட்களையுடையது.

(2) நம் நாட்டிற்குரிய பொது ஆண்டு மார்ச் 22-ந் தேதி தொடங்கும்.

(3) ஆண்டு எண் சாலிவாகன சகாப்த எண். அதாவது இவ்வாண்டு 1878 என எண்ணப்படும்.

(4) ஆண்டுக்கு நான்கு கால் ஆண்டுகள். ஒவ்வொரு கால் ஆண்டிலும் 31, 30, 30 நாட்கள் கொண்ட மூன்று மாதங்கள். ஆண்டின் இறுதி நாளும், லீப் வருடத்தில் நடு நாளும், தேதியும் வாரமும் குறிப்பிடப்படாத ஓய்வு நாட்களாகும்.

(5) மாதங்களின் பெயர்கள் சித்திரை, வைகாசி என்று இப்போதுள்ளவையே. சித்திரை, ஆடி, ஐப்பசி, தை மாதங்கள் 31 நாட்கள் கொண்டன வாகவும், பிற மாதங்கள் 30 நாட்கள் கொண்டன வாகவும் இருக்கும்.

சட்ட முறைக்கு நள்ளிரவிலும், மத முறைக்குப் பொழுது விடியவும் நாள் தொடங்கும். இந்தக் காலண்டர் 1956 மார்ச் 22-ந்தேதி முதல் நடைமுறை யாகும்.

இம்முடிவுகளை ஒட்டிக் குறைந்தது 5 வருடங்களுக்கு முன் கூட்டியே காலண்டர் வகுக்கப்பட வேண்டும். அத னுடன் ஒவ்வொரு நாளும் கோள் நிலையையும், விண் மீன் நிலையையும் அறியக்கூடிய "எபிமிரிஸ்" தயாரிக்கப் பட வேண்டும். அது விமானங்களுக்கும், கப்பல்களுக்கும் நேரத்தை அறியவும், அப்போதுள்ள இடத்தை அறிய வும் பயன்படும். இவற்றின் நிலை ஒரு குறிப்பிட்ட இடத்தை மையமாகக் கொண்டிருக்க வேண்டும். அவ் விடம், மத்திய பாரதத்திலுள்ள உஜ்ஜயின் என இந்தக் கமிட்டி முடிவு செய்துள்ளது.

பல ஆண்டுகளுக்கு முன்பாகவே அறிவித்த கணக்கு களின் உண்மையை அறிவதற்கு அங்கு ஓர் ஆராய்ச்சி நிலையம் நிறுவ வேண்டும் என்பதும் ஸாஹா கமிட்டி யின் கோரிக்கைகளில் ஒன்றாகும்.

உஜ்ஜயினின் சிறப்பு அதில் பழைய வான ஆராய்ச்சி நிலையம் 6-ம் நூற்றாண்டு முதல் இருந்தது; பாஸ்கராசாரியும், வராஹமிஹிரரும் அங்குப் பயின்றனர் என்பதுடன், அதன் "லான்ஜிட்யூட்" கிரீன்விச்சுக்குக் கிழக்கு 82'30' (லாடிட்யூட்) வடக்கு 23'11 லும் அமைந்

துள்ளது. அதனுல் உலக கால நிர்ணயிப்புக்குச் சரியாக 5½ மணி முந்தியதாகவும், சூரியன் உத்தராயணத்தில் செல்லும் எல்லைக் கோடாகவும் அமைந்துள்ளது.

இவற்றைக் குறித்து என் கருத்தையும் அறிய விரும்புவீர்கள். காலண்டர் வான சாஸ்திரத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டதன்று. பயிர்த்தொழில், போக்கு வரவு, உணவு, உடை முதலிய வாழ்க்கைத் தேவைகளுக்கு மழை, வெப்பம், குளிர்கால நிலையை முன் கூட்டி அறிவது இன்றியமையாதது. இப்பருவ நிலை சூரியனுக்கும் பூமிக்கும் இடை உள்ள தூரம், கோணம் ஆகியவற்றை ஒட்டி வரும். ஆக, ஸௌரமான (சூரியனை ஒட்டிய) ஆண்டும் மாதமும் சாந்திரமான ஆண்டிலும் மாதத்திலும் நலமுடையன. ஆகாய இடைவட்டத்தைப் பன்னிரண்டாகப் பகுத்து, பகுத்த ஒவ்வொரு ராசியிலும் சூரியன் இருக்கும் நாட்களைக் கணக்கிட்டு மாதங்களாக்கு வது வான சாஸ்திரப்படி சிறந்த முறையாகலாம். பொது வாழ்க்கைக்கு அம்முறை தேவை யில்லை என்பதோடு மக்கள் அறியவும் அரியது. குறிப்பிட்ட நாட்களுள்ள மாதங்கள் சௌகரியமானவை. சூரியன் கோளத்தின் இடைவட்டத்தைக் கடக்கும் நாளைப் பற்றிச் சாதாரண மனிதனுக்குக் கவலையில்லை: அவன் காண்பதுமில்லை. வரலாறு புனைவது மட்டுமின்றி மக்கள் ஒருவரோடு ஒரு வர் சேர்ந்து வாழவும், தம் கருத்துக்களையும் தேவைகளை யும் தெரிவிக்கவும் அவற்றை நிறைவேற்றும் முயற்சிகளை மேற்கொள்ளவும் பிறரோடு வாணிபம் செய்யவும், சட்டங் களை வகுக்கவும் அனைவருக்கும் பொதுவான ஆண்டு, மாதம், தேதி, கிழமை வேண்டியுள்ளன.

சாலிவாகன சகாப்தமும், சூரிய சித்தாந்தத்தை யொட்டிய சித்திரை வைகாசி மாதங்களும் அவற்றின் தேதிகளும் வழக்கொழிந்தன. இந்தியாவிற்கே கூட

அவை பொதுவன்று. இவ்வாறிருக்க, பிற நாட்டார் நம் ஆண்டு, மாத, தேதி எண்களை அறிவது எங்ஙனம்?

காலண்டர் உலகத்திற்குப் பொதுவாக இருத்தல் வேண்டும். இன்று பொது ஆண்டு எண் கிறிஸ்துவ சகாப்தமே என்பதை எவரும் மறுக்க முடியாது. மாதங்களும் அவற்றின் எண்களும் ஜனவரி, பிப்ரவரி ஆகியன என்பதும் மறுக்க முடியாதது. அம்முறையில் குறைகள் இருக்கின்றன; அவற்றைப் போக்க வேண்டும் என்பது உண்மையே. உலக முறையை நாமும் கையாளவேண்டும்; அதன் குறைகளைப் போக்க முயலவேண்டும் என்பதன்றி, புதிதாக யாருக்கும் புரியாத ஆண்டு எண்களையும் முறையையும் நாம் மட்டும் தனியே கையாள்வதில் பயன் இல்லை.

காலண்டர் சீர்திருத்த முயற்சியிலும், திருந்திய காலண்டரைக் கையாள்வதிலும் நாம் உலகத்தோடு ஒட்ட ஒழுகுதல் இன்றியமையாதது.

# ஜகதீஸ் சந்திர போஸ்

ஆர். பத்மநாபன்

நம் உலகம் விஞ்ஞான உலகம். மனித வாழ்க்கையில் விடாமுயற்சியினால் நாம் பெற்றுள்ள நலன்களுக்கு முக்கிய காரணமா யிருந்த சூழ்நிலையை ஆராய்ந்து பேரொளியாய்த் திகழ்வது விஞ்ஞானமே. விஞ்ஞானிகள் சமுதாயத்தின் ஒப்பற்ற அறிவுச் சுடர்களாவர். அவர்கள் குறும்பு செய்யும் சிறு குழந்தைகளைப் போல் தங்களைச் சுற்றியுள்ள பூதவுலகத்தின் மர்மத்தை-ஒரு சிறிய அணு முதல் மிகப் பெரிய பருப் பொருள் வரையில்-கண்டறியும் கூறிய அறிவின் திறமை நுவலுதற்கரியது. மனிதர்களின் எண்ணமும் நோக்கமும் ஒவ்வொரு நூற்றுண்டிலும் மாறி, உருவெடுத்து முன்னேற்றமடையும் புரட்சி ஏற்படுத்துவோர் விஞ்ஞானிகளே.

இவ் விஞ்ஞான மறுமலர்ச்சி சில நாடுகளில் அவ்வவ்வரசர்களின் சிறந்த வசதிகளினலும் சமூகத்தில் பொது மக்கள் காட்டிய பேராதரவினலும் ஏற்பட்டதென்ருல் மிகையாகாது. உதாரணமாக ருஷ்யாவில் முதலாவது பீடர் காலத்தில் ஒரு விஞ்ஞானக் கழகம் அரசாங்கத்தின் நேரடியான ஆதரவினுல் நிறுவப்பட்டது; அரசர் காட்டிய பேராதரவால் மாஸ்கோவில் ஒரு பல்கலைக் கழகமும் 1755-ல் ஏற்படுத்தப்பட்டது.

ஆனல் இம் மறுமலர்ச்சிக்குப் பல நாடுகளில் அந்தந்த அரசாங்கத்தின் ஆதரவும் பொருளுதவியும்

சிறிதளவும் கிடைக்கவில்லை. தனிப்பட்ட சில விஞ்ஞானிகளும், அறிஞர்களும் தங்கள் சொந்த உழைப்பினாலும் ஊக்கத்தினாலும் முன்னேற்றமடைந்தனர். குறிப்பாக இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாங்கம் விஞ்ஞான வளர்ச்சிக்கு எவ்விதத்திலும் ஆதரவு காட்டவில்லை. மேலும் விஞ்ஞானிகள் தங்கள் துறைகளில் முன்னேற்றமடைவதற்குப் பல இன்னல்களையும் சில சந்தர்ப்பங்களில் அரசாங்கத்தின் எதிர்ப்பையும் பொறுத்துக்கொண்டு முன்னேற்றமடைந்தனர். இந்தியாவில் 19-வது நூற்றாண்டின் மத்தியில்தான் சில சர்வகலாசாலைகள் நிறுவப்பட்டன. படித்த மேதாவிகள் சிலரே இருந்தனர். அப்பொழுதும் அரசாங்கம் சில விஞ்ஞானிகளுக்கு இடையூறு பல விளைவித்தது.

இந்த அனுகூலமற்ற சூழ்நிலையில் இந்திய விஞ்ஞானிகளில் பேரொளியான ஜகதீஸ் சந்திர போஸ் 1858 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் தேதி வங்காளத்தில் பகவான் சந்திர போஸ் என்பவரின் மகனாகப் பிறந்தார். ஜகதீஸ் ஒரு மத்திய வகுப்பைச் சேர்ந்தவர். ஆனால் அக் காலத்தில் வங்காளத்திலிருந்ததுபோல் போஸ் குடும்பத்தினர் தாய் மொழியான வங்க மொழி மீதும் தாய் நாட்டின்மீதும் பற்றுதல் கொண்டு விளங்கினர். அதற்கிணங்க ஜகதீஸ் சந்திரரும் தாய்மொழியில் தேர்ச்சி பெற்று ஆரம்பக் கல்வியும் மெட்ரிக்குலேஷனும் முடித்துக்கொண்டு, மேற்படிப்புக்காக ஒரு கிறிஸ்துவக் கல்லூரியிற் சேர்ந்து, பௌதிகத்திலும் ரசாயன சாஸ்திரத்திலும் தேர்ச்சி பெற்றுப் பட்டதாரியானார்.

பிறகு ஜகதீஸ் இங்கிலாந்துக்குச் சென்று பௌதிகம் பூகர்ப்பம் முதலியன பயின்று மேம்பாடடைந்து 1884-ல் ஆங்கில சர்வகலாசாலைப் பட்டமும் பெற்றார். போஸ் மேலும் வைத்தியத் தொழிலில் தேர்ச்சி பெற

வைத்தியக் கல்லூரியில் சேர்ந்தார். ஆனுல் அடிக்கடி நோய்வாய்ப்பட்டதனுல் அதை விட்டுக் கேம்பிரிட்ஜ் சர்வ கலாசாலைக்குச் சென்று அங்கும் சில மாதங்கள் விஞ் ஞானம் கற்ருர்.

போஸ் இந்தியாவுக்குத் திரும்பியபொழுது, கல்வி இலாகாவில் இவருக்குப் பௌதிகப் பேராசிரியராக ஓர் உத்தியோகம் கொடுக்கப்பட்டது. ஆனுல் இவருக்குச் சிறிதேனும் மனத்தில் அமைதியில்லை. தம் தோய்ந்த மனத்தில் தோன்றும் சீரிய எண்ணங்களை நிறை வேற்றி அவைகளைச் சோதித்து விஞ்ஞான ஆராய்ச்சி செய்ய வசதியின்றித் தவித்தார். இவரது அன்ருட வாழ்க்கையில் விஞ்ஞான ஆராய்ச்சியே முக்கிய இலட்சிய மாக விளங்கிற்று. மேனுட்டு விஞ்ஞானப் பத்திரிகை களில் மின்சாரத்தைப் பற்றியும் புகைப்படத்தின் சிறந்த அம்சங்களைப் பற்றியும் கடிதங்கள் எழுதி வந்தார். அவருக்குச் சிறு பொருளுதவியும் வெளிநாட்டு விஞ் ஞானிகளிடமிருந்து கிடைக்கலாயிற்று. மேலும் தம் சிக்கன வாழ்க்கையினுல் சிறிது பொருள் சேர்த்து வைத்துக் கடைசியாக ஓர் ஆராய்ச்சிக்கூடத்தை ஏற் படுத்தினுர். 1897-ல் இவர் முதன்முதலில் கண்டறிந்த மின்சார அலைகளின் அதிசயங்களைப் பற்றியும் ஒளி அலை களின் தன்மையைப் பற்றியும் பிரசங்கம் செய்ய இங்கி லாந்துக்குச் சென்று, பிற நாட்டினரின் கௌரவத்தைப் பெற்ருர். போஸ் கண்டறிந்த ஆராய்ச்சிகளில் முக்கிய மானவை கம்பியில்லாத் தந்தியின் ஒலி அலைகளாகும். இவற்றையே நாளடைவில் இத்தாலி தேசத்து விஞ் ஞானியாகிய மார்க்கோனியும் தொடர்ந்து ஆராய்ச்சி செய்து, கம்பியில்லாத் தந்தியைக் கண்டறிந்தார்.

போஸ் கண்டறிந்த இரண்டாவது ஆராய்ச்சி முதல் ஆராய்ச்சியை விட மேலானது. ஏனெனில் முதன்

முதலாக அவர்தான் பொருளெனப்பட்ட விஞ்ஞான சூழ்நிலையை உலோக வகை,பிராணி வகை,தாவர வகை என மூன்று வகையாகப் பிரித்து ஒவ்வொன்றிலும் மின்சாரத்தின் தொடர்பும் எதிர்ப்பும் உள்ளன வென்று ஆராய்ந்தறிந்து சோதனை செய்து முடிவாக விஞ்ஞான உண்மைகளை எல்லோரும் புரிந்துகொள்ளுமாறு வெளியிட்டார். அவருக்கு முன் சில விஞ்ஞானிகள்-குறிப்பாக 'தேக தத்துவ சாஸ்திரிகளும், பௌதிக சாஸ்திரிகளும் மட்டும் இவ்வுண்மைகளை உணர்ந்திருந்தனர். ஆனால் போஸ் தம் ஆராய்ச்சி ஒளியினால் அவர்களின் கொள்கைகளை மெய்ப்பித்தார். அவரது சீரிய உண்மைகள் பின்வருமாறு :---பொருளெனப்பட்ட உலகத்தில் உயிருள்ளதென்றும், உயிரற்றதென்றும் பிரிப்பது மடமை. தாவரங்களும் உலோகங்களெனப்பட்ட செம்பு இரும்பு முதலியனவும் மிருகங்களும் சிருஷ்டி விநோதத்தினால் ஒன்றுபட்டவை. அவையெல்லாம் உணர்ச்சியுள்ளவை.

இம்மாதிரி வியப்புறும்படி போஸ் விஞ்ஞானிகளுக்கு எடுத்துக்காட்டினார். இதன் பயனாக விஞ்ஞான உலகத்தில் இன்று உயிருள்ளவை, உயிரற்றவை என்ற பேதமில்லாமற்போய் விட்டது. 1901-ல் போஸ் இரண்டாம் முறையாக இங்கிலாந்து சென்று இவ்வாராய்ச்சிகளின் உண்மைகளை எடுத்துக் காட்டியபொழுது பௌதிக சாஸ்திரிகள் தேகசாஸ்திரிகள் உள்பட எல்லா விஞ்ஞானிகளும் எவ்வித மறுப்புமின்றி ஒப்புக்கொண்டனர்.

போஸ் செய்த மூன்றாவது ஆராய்ச்சிதான் மற்ற இரண்டையும் விட சிறப்பு வாய்ந்தது. தாம் கண்டறிந்த உண்மைகளில் ஒன்றான தாவரங்களுக்கும் உயிருள்ள பிராணிகளுக்கும் எவ்வித பேதமுமில்லை என்பதைத் தொடர்ந்து பல பரிசோதனைகளால் ஆராய்ச்சிசெய்தார். தாவரங்களும் உயிர்களைப் போல் சுவாசிக்கின்றன

வென்றும், அவற்றுக்கும் உணர்ச்சி உண்டென்றும் கண்டறிந்தார். இவ்வுண்மைகளேப் பிறருக்குக் காட்ட அவைகளுக்குத் தேவையான பல கருவிகளேயும் தாமே கண்டு பிடித்தார். இம்மாதிரி உலகில் முதன்முதலில், குறிப்பாக இந்தியாவில், ஆராய்ச்சி செய்து பிறருக்குத் தெரிவித்த புகழ் ஜகதீஸ் சந்திரரைச் சாரும்.

போஸின் பெயர் உலகிலுள்ள விஞ்ஞானக் கழகங்களிலும், சர்வகலாசாலேகளிலும், ஆராய்ச்சிசாலேகளிலும் பரவலாயிற்று. பல ஆங்கில விஞ்ஞானிகள் அழைப்பிற்கிணங்க 1914-ல் தம்முடைய மூன்ருவது ஆராய்ச்சியின் உண்மையை எடுத்துக் காட்ட இங்கிலாந்துக்குச் சென்ருர். அப்பொழுது அவர் சிறப்பாக வரவேற்கப்பட்டார். பிறகு அங்கிருந்து அமெரிக்கா சென்று தம்முடைய ஆராய்ச்சியின் உண்மைகளே அயல்நாட்டு விஞ்ஞானிகளுக்கு எடுத்துக் காட்டி அழியாப் புகழைப் புதுவுலகத்தில் நாட்டினர்.

போஸ் இந்தியா திரும்பியதும் அரசாங்கத்தின் மேலான மரியாதைகள் அவரைத் தேடி வந்தன. பட்டங்களும் வழங்கப்பட்டன. ஆனுல் அவர் அவற்றை விரும்பவில்லே. தம் ஆராய்ச்சிகள் புவியில் அழியா வண்ணம் 1917-ல் கல்கத்தாவிலும் டார்ஜிலிங்கிலும் ஆராய்ச்சிக் கூடங்கள் ஏற்படுத்திப் பல மாணவர்களுக்கு விஞ்ஞான ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்த உதவியளித்தார். அவரது பூதவுடல் 1937-ல் மறைந்தது. ஆனுல் புகழுடம்பின் மணம் உலகெங்கும் இன்னும் வீசுகிறது. விஞ்ஞான மண்டலத்தில் கலிலியோ, நியூடன், டார்வின், கியூரி இவர்களுடன் இந்திய நட்சத்திரமான ஜகதீச சந்திரரும் இடம் பெற்றுள்ளார்.

# ஆறில் ஒன்று

"உதயன்"

தம்பி, பாரதக் கதை படித்திருக்கிருயா? பகவத்கீதை படித்திருக்கிருயா? இரண்டுமே இல்லையா? இல்லையானல் போகட்டும். பாரத யுத்தம் என்ன என்ருவது கேள்விப் பட்டிருக்கிருய் அல்லவா? அது போதும். புராணத்தைப் புளுகுக் குப்பை என்று சொல்லிப் புதுமை பேசும் நாஸ்திகஞ நீ? அல்லது அவற்றை வார்த்தைக்கு வார்த்தை நூற்றுக்கு நூறு நம்பும் பித்துக்குளியா? எதுவானல் என்ன? பாரத யுத்தம் எதற்காக நடந்தது என்று தெரிந்தால் போதும்.

'நாடு வேண்டாம் நகரம் வேண்டாம், ஊர் வேண்டாம், உன் சொத்தில் பங்கு வேண்டாம். குந்த குடிசை, ஐவருக்கும் ஐந்து கொடு' என்று கண்ணன் கால் ஓய நடந்து கேட்டானே, அதற்குத் துரியோதனன் சொன்ன சொல் என்ன? 'மண்ணு, இம்மியரளவுகூடக் கொடுக்க மாட்டேன்' என்று சொன்ன சொல், அந்த அதர்ம மூச்சு முடியப் பாரதப் படுகளம் எழவில்லையா? பாஞ்சாலி சபதம் முடிக்கவா, பகவத் கீதை படிக்கவா பாரத யுத்தம் எழுந்தது? இதிலே உன்னேடு வாதாட விரும்பவில்லை. இன்னும் பேச வேண்டியது நிறைய இருக்கிறது. வாழ்வதற்கு இம்மிகூட நிலம் இல்லை என்று சொல்ல, துரியோதனன் யார்?

'ஓ மன்னன் மகனே! பாண்டவருக்கு மண் கொடுத்து விட்டால் மண்டலம் போய்விடுமோ? இல்லை மகுடம்

உருண்டு விடுமோ? மண்ணுக்கு உரிமை கொண்டாடு பவனுக்குப் பிச்சை கொடுக்க மன்சு இல்லையா?

தாயாதிப் போர் நாட்டுக்காக எழவில்லை, நகரத்திற் காகவும் எழவில்லை. பாண்டவர் பறிகொடுத்த சொத்துக் கும் சுகத்துக்கும் எழவில்லை. பாஞ்சாலியின் குழல் முடிக் கவும், பீமனின் வெஞ்சினத்திற்காகவும் எழவில்லை. 'வன வாசம் வாழ்ந்து, அஞ்ஞாத வாசத்தில் ஒளிந்து மீண்டு வந்தால் பாதிப் பங்கு தருகிறேன்' என்று சொல்லி வாக்குப் பிறழ்ந்த புரட்டனை வீழ்த்தவும் எழவில்லை. மன்னர் மக்களின் மணி மகுடத்திற்கான போராட்ட மாகவும் நிகழவில்லை. கண்ணன் கடைசி கோரிக்கையாக மண்ணை யாசித்தான்; வாழ வீடு கேட்டான். அதையும், மறுத்துவிட்டான் துரியோதனன். இந்த அதர்மத்தை வாழ விடுவதாவது!

பிறப்பிலே மன்னனுகி மண்டலம் ஆளும் உரிமை மன்னர் பரம்பரைக்கு இருக்கட்டும். வலியோர் எளி யோரை ஆள முடி சூடட்டும். ஆனல் இந்த மண்ணிலே பிறந்தவனுக்கு, அதிலே வாழ்ந்து மடிபவனுக்கு மண் இல்லை என்று சொல்ல, சாஸ்திரம் ஏது? சட்டம் ஏது? இல்லை, சரித்திரம்தான் இருக்கிறதா?

ஆதி யுத்தம் பாரத யுத்தமா? இல்லை அதற்கு முன்பும் யுத்தம் உண்டா? நீ தான் அந்த யுத்தங்களைப் புராணப் புளுகு என்று நம்பமாட்டாயே. சரித்திரத்தை நம்புகிருய் அல்லவா? வெள்ளைக்காரன் இந்தியாவைப்பற்றி எழுதிய சரித்திரத்தைத்தான் கரைத்துக் குடித்திருப்பாயே. சிப் பாய்க் கலகம் நடந்த தேதியைத் தூக்கத்தில்கூட ஒப்பிப் பாய் நீ. பரீட்சைக்குப் படித்துத் தேர்வுபெற்ற பிள்ளை யல்லவா? ஊர்ச் சமாசாரம் தெரியாது போனுலும் உலக சரித்திரத்தைத் தேதிவாரியாக உருப் போட்ட புத்தகப்

பூச்சி தானே நீ....அசுவமேதயாகப் போர்கள்...சே, சே புராணப்போர்! அது வேண்டாம், மகா அலெக்ஸாண்டர் திக் விஜயப் போரிலிருந்து அமெரிக்கா அணுகுண்டு போட்டது வரை எல்லாம் நினைவு இருக்கிறதா? இதை எதற்குக் கேட்கிறேன்? சரித்திரப் பரீட்சை கேள்வியல்ல. பரீட்சைக்கு இது வரும் என்று குறித்து வைத்துக் கொள்ளாதே.

பானிபட் யுத்தங்களைவிட மனித வரலாற்றிலே ஓயாத போர் நடந்து கொண்டிருப்பது உனக்குத் தெரியுமா? தெரியாததற்குச் சரித்திரப் புத்தகத்தைப் புரட்டாதே. அதிலே மன்னர்களின் போர்தான் இருக் கிறதே யொழிய மனிதனின் உரிமைப் போரைப்பற்றிய வார்த்தை ஏது?

இராவணன் பத்துத்தலை உருண்டகதை, பிரிட்டிஷ் பார்லிமெண்டு பரம்பரை மன்னர்களின் தலையை உருட் டிய விவகாரத்திலே உரிமைப் போர் இருக்கிறது. சீதை யைவிட இராவணன் மறுத்தது சரியா? மக்களின் உரிமையை மன்னன் மறுத்தது சரியா? அக்கிரமம் அதர்மம் என்று சொல்லுகிறாய் அல்லவா? அதுமாதிரி தான் இந்த மண்ணையும் பற்றிய விவகாரம்.

மண்ணில் வந்த மனிதனை மண்ணினின்றும் பிரிக்க முடியாது. எல்லையும், கோட்டையும் கட்டி இது என் னுடையது என்று சொல்லுகிறாய்; வேலியைப் போட்டு உள்ளே நுழையாதே என்கிறாய்; போகட்டும்; அது உன் அப்பன் சொத்து. கஷ்டப்பட்டு நீ சம்பாதித்த சொத்து. இப்படியே நீ மாளிகையைக் கட்டிக் கொள்கிறாய்; பண்ணைக் கட்டிக் கொள்கிறாய். எனக்கு மாத்திரமல்ல, எல்லோருக்குமே இல்லாமல் அடிக்கப் பார்க்கிறாய். மண் டலங் கட்டியாளும் ஆசையோ? உன் ஆசை பேயாசை

யாகட்டும். அதைப் பற்றிக் கவலையில்லை. எனக்கு ஒன்றும் இல்லை யென்று சொல்ல வந்தாயே, அதைத் தான் கேட்கிறேன். எனக்கு வாழும் உரிமை இல்லை என்று சொல்ல நீ யார்? நன்கு யோசித்துச் சொல்லு. அவசரமில்லை.

நீயும் நானும் ஒரு நாள். மண்ணுகைப் போகிருேம். இருவருக்கும் கடைசியில் ஆறடி நிலம்தான் ஆகப் போகிறது. ஆறடி நிலம் ஒரு பிணத்திற்கு உரிமை யாவதை யாரும் மறுப்பதில்லை. ஆனுல் மனிதன் வாழ் வதற்கு நிலம், வயிற்றுக்குக் கஞ்சி, ஒரு துண்டு மண் இல்லை என்ருல் இந்தப் பூமி பொறுக்காது தம்பி!

உன் ஆசைக்கு வேலி இல்லை; உன் அதிகாரத் திற்கு வரம்பில்லை: ஆட்சிக்குக் கட்டில்லை; உன் சம்பாத் தியத்திற்கு அளவில்லை; பேயாய்ச் சுற்றி அலைந்து; சம் பாதித்து எல்லாவற்றையுமே தலையில் கட்டிக் கொள்.

ஆனுல் எனக்குள்ள மண்ணை இல்லையென்று சொல் லாதே. எனக்கு வேண்டும் சிறு குடிசையையும் இல்லை யென்று மறுக்காதே. கண்டிப்பாய் பாரத யுத்தம் வரும். இன்றில்லாமல் இருக்கலாம். நாளை குருக்ஷேத்திர யுத்தம் வரும். அதிலே என்னை யல்ல, என்னைப் போல் பல பேரை, உன்னைப் போல் பலரைச் சந்திக்க வேண்டி வரும். வெற்றி எங்களுடையதாகத்தான் இருக்கும்!

பாரத யுத்தமாவது, பைத்தியம் என்று சிரிக்காதே தம்பி. பட்டினிப் பட்டாளங்கள், பஞ்சையர் கூட்டங்கள் உன் வீட்டுவாசலிலே பிச்சைக்கு வரும். விரட்டிக் கொண் டிருக்கலாம் என்று இறுமாப்புக் கொள்ளாதே. அந்த இறுமாப்பு மிகப் பொல்லாதது. லூயி மன்னன், ஜாரின் இறுமாப்பு எல்லாம் எப்படி அழிந்தன தெரியுமா? அவர் களின் வல்லமையும் வாழ்வும் எப்படி வீழ்ந்தன? அதை

நீ புரட்சி என்பாய். நான் அதை குருக்ஷேத்திரம் என்பேன். புராணப் பைத்தியம் போல் இருக்கிறது என்று எண்ணுதே.

அதர்மம் இருக்கும் வரையிலும் இந்தப் பூமியில் தர்மப் போர் ஓயாது. உன் உடல் இரத்தம் அதர்மப் போருக்காகச் சிந்துமானல் என் இரத்தம் தர்மத்திற்காகச் சிந்தும். இதையே தானப்பா கண்ணன் அன்று துரியோதனனுக்கும் சொன்னுன். காண்டீபனுக்கும் சொன்னுன்.

நீ நாடாள்வது உன் விதி என்று சொல்; நான் வீடில்லாமல் அலேவது என் விதி என்று சொல். ஆனல் அது என் விரதமல்ல. இரண்டுமே பாவ புண்ணியம் என்று பேசு. ஆனல் எனக்கு மண்ணில்லே, வாழ மனே யில்லே என்று சொல்லுகிருயே அது எதைச் சேர்ந்தது? பாவமா புண்ணியமா?

மன்னர் மக்களுக்காக கண்ணன் அன்று நாடு கேட்டு, கடைசியில் ஐந்து வீடு தானம் கேட்டதும், அதை மறுத்ததினல் குருக்ஷேத்திரத்தில் பாரதப் போர் நடந்ததும் உனக்குத் தெரிந்ததுதானே. அப்படித்தான் ஏழை எளியவர் உன்னுடையதில் ஆறில் ஒன்று தான மாகக் கேட்கின்றனர். தானம் கொடு. இல்லேயேல் குருக்ஷேத்திரம் ஏற்படுவதைத் தடுக்க முடியாது.

தம்பி, அதோ பார் எல்லேயிலிருந்து ஒரு மெல்லிய கோஷம் மிதந்து வருகிறது கேள். "தானம் தா, இல்லே யேல் புரட்சி மூளும்."

# தலையில்லாத குதிரை வீரன்

[இக் கதையின் ஆசிரியர் வாஷிங்டன் இர்விங் (1783-1859) அமெரிக்க நூலாசிரியருள் முதன் முதல் உலகப் புகழ் பெற்றவர். அவர் கதைகள் புனைந்தவர், கட்டுரைகள் வரைந்தவர், வரலாறும் எழுதியவர். நியூ யார்க் வரலாறு ஒன்று எழுதி நிலைத்த புகழ் பெற்றவர் அவர்.

அவர் எழுதியுள்ள கதைகளிலும் கட்டுரைகளிலும் நகைச் சுவை மல்கிக் கிடைக்கும்; இயற்கை அழகும் இனிய சொல்லும் எங்கும் காட்சி அளிக்கும்.

பல கதைகள் எழுதியிருக்கிறார். அச்சுறுத்தும் கதையையும் அவர் சிறந்த இலக்கியமாக்கியவர். அவரது கதைகளைப் படிப்போர் கவலையை மறந்து கற்பனை உலகைக் கண்டு களிப்பெய்துவர்.

அவர் வெளி நாடுகளில் நெடுங்காலம் வாழ்ந்தவர்; தம் நாட்டுக்காக உழைத்தவர்; எழுதியவர். அவர் தம் வாழ்க்கையின் இறுதிப் பதின்மூன்று ஆண்டுகள் ஹட்ஸன் ஆற்றங் கரையில் டாரிடவுன் என்னும் ஊருக்கு அருகே குடியிருந்தார். இக் கதையில் வரும் மயக்க வெளியிலுள்ள கல்லறைத் தோட்டத்தில் அவர் அடக்கம் செய்யப் பெற்றார்.]

இருபுறமும் வானளாவிய குன்றுகள். அவற்றிற்கு இடையில் ஒரு சிறிய பள்ளத்தாக்கு. அமைதியே குடி கொண்டுள்ள இடம் அது. அத்தகைய அமைதியான இடத்தை உலகில் எங்கும் காணமுடியாது. உலகத்

தொல்லைகளை மறந்து ஓய்ந்திருந்து இன்பங் காண விரும்பி அந்த இடத்துக்கே செல்வேன்; அந்த மலையிடுக்கிலேயே மகிழ்ச்சி காண்பேன்.

அந்த இடத்துக்கு ஒரு விந்தையான பெயர். அந்தப் பெயர் வைத்தவர்கள் பழங்காலத்தில் அங்குக் குடியேறிய மக்கள். காரணமில்லாமல் அவர்கள் அப்பெயர் வைக்கவில்லை. அப்பெயர் பொருத்தந்தான் என்று நமக்கும் தோன்றும். மயக்க வெளி என்பது அந்தப் பெயர். மயங்க வைக்கும் மலையிடுக்கே அது. அங்கு ஆட்சி செய்யும் அமைதியும் மயங்க வைக்கிறது; அதனைப் பற்றிய பழங் கதையும் மயக்கம் விளைவிக்கின்றது. அங்குள்ள மக்களை நோக்கினாலும் அவர்கள் மனத்தில் ஒரு வகைத் தூக்க மயக்கம் குடி கொண்டுள்ளதே போல் தோன்றும்.

அந்தப் பள்ளத்தாக்கைப்பற்றி நெடுங்காலமாகச் சொல்லப்பட்டு வரும் கதை ஒன்று உண்டு. அக் கதை அனைவரையும் நடுங்க வைக்கும். ஒரு பெரிய குதிரையாம். அதன்மீது ஒரு நெடிய மனிதனாம். அவன் அக் குதிரையேறி அங்கும் இங்கும் செல்கிறானாம். அம் மனிதனுக்கோ தலை இல்லையாம். போரில் தலையிழந்த குதிரை வீரனாம் அவன். இடையிடையே சிலர் அவனைக் கண்டதாகவும் பேச்சு. அந்தத் தலையில்லா வீரனைப் பற்றி ஆயிரம் கதைகள். மயக்கவெளி வீரன் அவர்களை மயங்க வைத்தான்.

* * * *

அந்த ஊரில் இக்கபாத் கிரேன் என்பார் ஒருவர் இருந்தார். அங்குள்ள பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிப்பதே அவர் தொழில். அவர் ஒட்டைபோல் நெட்டை; மிகச் சிறிய தலை; தலையின் மேற்புறம் தட்டை; உருளும் பெரிய கண்கள்; கொக்குக்கு இருப்பது போன்ற

மூக்கு; காற்றடிக்கும் போது வளைந்து கொடுத்துக் காற்றடிக்கும் திசை காட்டும் சிறந்த மூக்கு; நீண்ட கால்கள்; குறுகிய தோள்கள்; சிறிய கழுத்து; பெரிய வயிறு; பருத்த கைகள்; சிறுத்த தொடைகள்; தொப்பை தொழு தொழுத்த தோற்றம்; தொங்கு தசைகள்; தொழ தொழ வென்றிருக்கும் சட்டை; சட்டைக்கு வெளியே நீட்டிக் கொண்டிருக்கும் நெடுங் கைகள். இத்தகைய அழகெல்லாம் ஒருங்கே அமைந்தவர் அந்த ஆசிரியர்!

அவரது அழகைக் கண்டவர்கள் அவரது பள்ளிக் கூடத்து அழகைப் பார்க்க வேண்டியதில்லை. மரக்கட்டைகளால் அவர் சுவர் எழுப்பிவிட்டார். பழைய காகிதங்களை அங்கும் இங்கும் ஒட்டி, பள்ளிக்கூடத்தை அழகுபடுத்தி விட்டார். இடையிடையே மரக்கட்டை தோன்றும். அதுவும் ஓர் அழகுதான். பள்ளிக்கூடம் தன்னந்தனியே நின்றது. அதற்கு அருகே மரங்கள் அடர்ந்த குன்றுகள் காட்சியளித்தன. ஓடையொன்று பாடசாலை அருகே ஓடியது. பாடசாலை மாணவர் படிக்கும் ஓசை தேனை மொய்க்கும் வண்டுகளின் இன்னிசை போல் கேட்கும். ஆசிரியரின் அதட்டலும் மிரட்டலும் இடையிடையே கேட்கும். அந்தப் பள்ளிக்கூடத்தில் ஆட்சி செலுத்தினர் நம் நண்பர் இக்கபாத் கிரேன்.

அவர் மற்ற உபாத்திமாரைப் போன்றவரென்று நினைத்துவிடலாகாது. அவர் எண்ணும் எழுத்துமன்றிப் பண்ணும் பாட்டும் படித்துக் கொடுத்தார். மயக்க வெளியிலுள்ள பாட்டாசிரியர் அவரே. பாட்டுப்படித்துக் கொடுத்துப் பணம் தேடினர் அவர்.

அவரிடம் இசை பயிலச் சென்றவர்களுள் இளநங்கை ஒருத்தி இருந்தாள். அவள் தன் தாய் தந்தையருக்கு ஒரே மகள். அவள் தந்தையார் சிறிது செல்வம்

படைத்தவர்; உழுதுண்டு வாழ்ந்தவர். பாட்டுப் பயின்ற அப்பாவையின் பெயர் கத்திரினா என்பது. அவளுக்கு வயது பதினெட்டே. உடல் அழகு மிக்க நங்கை. அவள் கன்னங்கள் செக்கச் செவேரென்றிருந்தன. அவளது அழகைப் புகழாதார் இலர். தனது அழகுக்கேற்ற ஆடைகளையே, பழமையும் புதுமையும் கலந்து பார்ப்பவர் நோக்குமாறு உடுத்துவது அவள் வழக்கம்.

அழகே வடிவமான நம் ஆசிரியர் இக்கபாத் அழகை அவாவும் உள்ளம் உள்ளவர்; மெல்லியலார் நல்லியல்பை மிகவும் பாராட்டுபவர். பாட்டுப் படிக்க வந்த பண்புமிக்க பெண்மணியை அவர் பொருட்படுத்தாமலிருக்க முடியாது. அவரது கண்ணையும் கருத்தையும் கவர்ந்துவிட்டாள் அந்தக் காரிகை.

இக்கபாத் அவளது தந்தையாரது பண்ணையையும் பண்ணை மாளிகையையும் பார்க்கச் சென்றார். வளங்கொழிக்கும் வயல்கள், எங்கும் பசுமைக் காட்சி, நறுமணம் பரப்பும் பூக்கள், நல்ல பழங்கள் தொங்கும் மரங்கள். நடுவிலே ஓர் அழகிய மாளிகை. உலகத்தில் சிறந்த அழகி, ஒரே மகள், உள்ளதெல்லாம் அவளுக்கே, அவளை மணக்கும் ஆடவனுக்கே அனைத்தும். இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்தார் இக்கபாத். செய்யவேண்டுவது ஒன்றே என்று தெரிந்துவிட்டது அவருக்கு.

எண்ணித் துணிதல் வேண்டும் என்று முதலில் எண்ணிப் பார்த்தார் இக்கபாத். பெண்மணியின் பேதைமையுள்ளத்தைக் கொள்ளைகொள்வது எவ்வாறு? அவளைக் கைப்பற்றக் கருதும் காளையரை வெல்வது எவ்வாறு? இளைஞர் பலர் அவளை விரும்புகிறார்களே; அவர்களை எவ்வாறு வெல்வது? இவற்றை யெல்லாம் எண்ணி எண்ணிப் பார்த்தார்.

மயக்க வெளியிலுள்ள மங்கையை மணக்கக் கருதிய வர்களுள் ஆபிரகாம் என்பவன் மிகவும் முக்கியமானவன். அவன் பிராம் எனப்பட்டான். பிராம் என்பவனை வெல்ல வேண்டும், மற்றப்படி காரியம் கைகூடாது. பிராம் என் பவனை விரட்டவும் முடியாது.. வெல்லவும் முடியாது. பிராம் உடல் வலிமை மிகுந்தவன். அந்த நாட்டுப் புறத்தில் அவனுக்கு இணையான வீரர் இல்லை. அவன் எதற்கும் துணிந்தவன். அவன் உளத் திண்மையும் உடல் உரமும் ஒருங்கே அமையப் பெற்றவன். அவனால் போர் செய்து வெல்லவும் முடியும். வேடிக்கையாய்ப் பொழுது போக்கவும் முடியும். அவன் மிகவும் முரடன். ஆயினும் நகைச்சுவை உள்ளவன். அவனை வெல்வது எளிதோ?

அவனை மறைமுகமாய் மதியால் வெல்வதே மாண்பு என்று நம் ஆசிரியர் கண்டார். 'பாட்டுச் சொல்லிக் கொடுக்கிறேன்' என்று சொல்லிக்கொண்டு பாவையின் வீட்டுக்கு அடிக்கடி போகத் தொடங்கினர். மாலை வேளை யில் மரத்தடியில் அம் மங்கையோடு பேசுவது அவருக்கு வழக்கமாயிற்று.

இதனைப் பிராம் என்னும் முரடன் தெரிந்துகொண் டான். எனவே அப் பெண்ணின் வீட்டுக்கு அவன் வரு வதில்லை. அவன் உள்ளத்தில் பகைமைத் தீ பற்றி எரிந்தது.

அவன் தன்னைப் போன்ற முரடர்களைக் கூட்டிக் கொண்டு இக்கபாத்துக்குத் தொல்லை விளைக்கத் தொடங்கிவிட்டான். பள்ளிக்கூடத்துப் புகைப்போக்கியை அவன் அடைத்துவிட்டான். ஆசிரியர் பிள்ளை களுக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுக்கும்போது பள்ளிக் கூடத்தில் புகை மண்டியது. இரவில் அவன் பள்ளிக்

கூடத்தில் புகுந்து கொள்ளையடித்தான். இக்கபாத் தம் காதலிக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கும் போது அந்த இடத்தில் ஒரு நாயைக் கொண்டு விட்டு ஓயாமல் குரைத்துக் கொண்டிருக்கச் செய்தான்.

இவ்வாறு சிறிது காலம் சென்றது. காதல் போரில் பெரிய மாறுதல் ஒன்றும் நிகழவில்லை. ஒரு நாள் இக்கபாத்துக்கு ஓர் அழைப்பு வந்தது. அன்று மாலை நடக்கும் விருந்து விளையாட்டு வேடிக்கைகளுக்கு வர வேண்டுமென்று அவரை அழைத்திருந்தது.

அக்கூட்டத்தில் இணையற்ற குதிரை வீரராகக் காட்சியளிக்கக் கருதினர் இக்கபாத். குதிரையொன்றை அவர் இரவலாகப் பெற்ருர்; மாபெரும் வீரனே போல் குதிரை மீது புறப்பட்டுவிட்டார். அவரது காதலியின் வீட்டில்தான் விருந்து நடந்தது. வீரர் விருந்து மண்டபம் சேர்ந்தார். பல வகை உணவுகள் பரிமாறப்பட்டன. இக்கபாத் ஆத்திரம் சிறிதுமின்றி ஒவ்வொன்றையும் தம்மால் இயன்ற அளவு உண்டார்.

இசை முழங்கியது; ஆடல் தொடங்கியது. பாடல் மட்டுமன்றி ஆடலும் தெரிந்தவர் நம் வீரர். ஆடத் தொடங்கினர். அவரது உடலில் அசையாத உறுப்பொன்றும் இல்லை. சரிந்து தொங்கும் தசை குலுங்க, உடலெலாம் சுழல, பாடலாசியர் ஆடலாசிரியரானர்.

ஆடல் முடிந்தது. ஆடியவர்கள் அங்கங்கே அமர்ந்திருந்து கதைகள் சொல்லிக் களித்தனர். அவர்கள் சொன்ன கதைகளுள் மயக்க வெளிக் குதிரை வீரன் கதை ஒன்று. தலையற்ற வீரன் தன் குதிரையைக் கல்லறைத் தோட்டத்தில் கட்டி வைத்திருக்கிருன் என்றும், நள்ளிரவில் குதிரை மீதமர்ந்து தலையில்லாமல் மயக்க வெளியை சுற்றிப் பார்க்கிருன் என்றும் அவர்கள் பேசிக்

கொண்டார்கள். அவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டே இருந்தார் நம் குதிரை வீரர்.

நள்ளிரவாயிற்று. அவர்கள் அனைவரும் அவரவர் வீட்டுக்குப் போகத் தொடங்கினர்கள். குடும்பம் குடும்ப மாக வண்டிகளில் சென்ருர்கள் சிலர்; குதிரைகளில் சென்ருர்கள் சிலர்; எல்லோரும் போய் விட்டார்கள். நம் குதிரை வீரர் இக்கபாத் மட்டும் போகவில்லை. அவர் தம் காதலியோடு தனியே அளவளாவிப் பேசி விட்டுப் போதல் வேண்டுமென்று நின்றுவிட்டார். அவர்கள் என்ன பேசினர்களென்பது தெரியாது.

வீரர் வெற்றி பெறவில்லை என்பது போல் தோன்றி யது. அவரது காதல் நாடகம் ஏமாற்றமாய் முடிந்தது போலும். வெறுப்புத் தோன்றிவிட்டது வீரருக்கு. பெண் கள் காதலெல்லாம் அவ்வளவுதான் என்று அவர் முடிவு செய்துவிட்டார். அவர் குதிரை மீது ஏறி வீட்டுக்குப் புறப்பட்டார். உயர்ந்த குன்றுகளுக்கு அருகேயுள்ள வழி யாய் மனந் தளர்ந்தவராய் அவர் போனர். அன்று மாலை அவர் மகிழ்ச்சி ததும்பியவராய் வந்த வழி அது.

விருந்து மண்டபத்தில் கேட்ட பேய்க் கதைகளெல் லாம் மனத்தை உறுத்தலாயின. அவற்றை நினைக்க நினைக்க அச்சம் அவரை ஆட்கொள்ளலாயிற்று. இரவும் வர வர இருள்வதாகத் தோன்றிற்று. அந்நிலையில் சிறிது ஒளி வீசிய நக்ஷத்திரங்களையும் மேகங்கள் மறைத் தன. அதுவோ மயக்கவெளி. அன்று கேட்டவையெல் லாம் பேய்க் கதைகள். அது தலையில்லாக் குதிரை வீரன் தாண்டவமாடியதாகச் சொல்லப்பட்ட இடம்.

சிறிது தொலைவில் சிற்ருறு ஒன்று அடர்ந்த காட்டை நோக்கி ஓடிக் கொண்டிருந்தது. அதனைக் கடந்து செல்வதற்கு ஒரு பாலம் இருந்தது. அந்தப்

பாலத்தருகே குதிரையின் காலடி ஓசை போல் கேட்டது. சிறிது நேரத்திற்குள் பருத்த நெடிய உருவமொன்றை அவர் கண்டார். அரக்கன் ஒருவன் தம்மைப் பிடித்துக் கழுத்தை நெறிக்கப் போவதாக அவர் நினைத்துவிட்டார்.

அச்சம் அவரைப் பிடித்தது; மேலெல்லாம் சிலிர்த்தது; தலைமயிர் எழுந்து நின்றது. ஓடிப் பிழைக்கவும் முடியாது; நின்று எதிர்க்கவும் முடியாது. பேசுவதற்கும் அவருக்கு நா எழவில்லை. ஆயினும் துணிந்து "யார் அது, யார் அது?" என்று கேட்டார். மறுமொழி ஒன்றும் இல்லை. மீண்டும் கேட்டார். பேச்சொன்றும் இல்லை. அச்சத்தை நீக்குமாறு ஒரு பாட்டுப் பாடிப் பார்த்தார்.

அச்சமயத்தில் அவர் பார்த்த உருவம் நகர்வது போல் தோன்றியது. நம் நண்பரை நடுக்கம் பிடித்தது. நடு வழியில் வந்து நின்றது அவரை நடுங்க வைத்த உருவம். கூர்ந்து நோக்கினர் இக்கபாத். குதிரையை, கருங்குதிரையைக் கண்டுவிட்டார்; அதில் ஏறியிருந்த அரக்கனையும் பார்த்துவிட்டார்.

அரக்கனைக் கடந்து அவனுக்கு முன்னே சென்று விட வேண்டும் என்று அவர் துணிந்தார். ஆதலால் அவர் தம் குதிரையை விரைவாய்ச் செலுத்தினர். அரக்கனும் குதிரையைச் செலுத்தி அவரைத் தொடர்ந்தான். அவர் அவனுக்குப் பின்னே போக எண்ணி வேகத்தைக் குறைந்தார். அவனும் குறைத்தான். அவருக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை.

அச்சமூட்டிய அரக்கனைக் கூர்ந்து நோக்கினர் கருங் குதிரை மீதிருந்த வீரனுக்குக் கழுத்தின் மேல் தலை இல்லை. குதிரை அவருக்கு நேரே திரும்பியது. அப்பொழுது ஒரு தலையையும் அவர் பார்த்துவிட்டார்.

அத்தலை கழுத்தின் மேல் இல்லை. தலை தனியே கையில் இருந்தது.

அச்சம் அளவு கடந்து விட்டது. ஓடிப் பிழைக்க நினைத்து விட்டார் நம் வீரர். குதிரையைத் தட்டி விட்டார். காலடி பட்டுக் கற்கள் தெறிக்கக் குதிரை பறந்தது; கருங் குதிரையும் கடுமையான வேகமாய்த் தொடர்ந்து வந்தது. ஆசிரியர் இக்கபாத் வேறு ஒரு வழியாய்க் குதிரையைச் செலுத்தினர். கருங் குதிரையும் அவர் சென்ற வழியே வேகமாய் நெருங்கியது.

நம் வீரர் துணிந்து பின்புறம் திரும்பித் தலையில்லாத குதிரை வீரனை நோக்கினர். அந்த அரக்கன் அவர் மீது எறிவதற்குக் கையில் வைத்திருந்த தலையைத் தூக்கினன். ஆசிரியர் சிறிது விலக முயன்றார். ஆயினும் குறி பார்த்து எறிந்து விட்டான் அரக்கன். குதிரையினின்றும் கீழே விழுந்து உருண்டார் இக்கபாத்.

மறுநாள் காலையில், இக்கபாத் ஏறிச் சென்ற குதிரையைச் சிலர் கண்டார்கள். அதற்குச் சேணம் இல்லை. அது புல் மேய்ந்து கொண்டிருந்தது. பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள் கூடியிருந்தார்கள். அவர்கள் ஆசிரியரோ அங்கு இல்லை. இரவிலும் அவரைக் காணவில்லை.

காலையில் ஓர் இடத்தில் சிதைந்த சேணத்தை அவ்வூரார் கண்டார்கள். அந்த இடத்தைச் சுற்றிப் பார்த்தார்கள். ஓர் இடத்தில் இக்கபாத்தின் தொப்பி சப்பையாய் போய்க் கிடந்தது. அதற்கு அருகே உடைந்து சிதறிய பூசுணைக்காய் ஒன்று கிடந்தது.

சில நாட்கள் சென்றன. இக்கபாத்தை ஒருவரும் காணவில்லை. அந்த ஊரில் இதைப்பற்றி ஒரே பேச்சு. ஐயோ, பாவம்; இக்கபாத்தைத் தலையில்லாத குதிரை

வீரன் எங்கேயோ கொண்டு போய்விட்டான் என்று பலரும் பேசிக் கொண்டார்கள். இக்கபாத்தைப் பற்றி ஒன்றுமே தெரியவில்லை. பூசுணைக்காய் உடைந்து கிடந்த இடத்திற்குப் போவதற்கு மக்கள் அஞ்சினார்கள்.

இவ்வாறிருக்க, சில ஆண்டுகள் சென்றன. யாரோ ஒருவர் நியூயார்க் நகரத்துக்குப் போய் வந்தார். அவர் அங்கு இக்கபாத்தைப் பார்த்ததாகச் சொன்னார். இக்கபாத் மயக்க வெளிக் குதிரை வீரனுக்கு அஞ்சி ஒருவருக்கும் தெரியாமல் நியூயார்க் நகரத்துக்குச் சென்று ஒரு பள்ளிக்கூடம் தொடங்கினாராம். ஆசிரியராய் வேலை செய்துகொண்டே சட்டம் பயின்றாராம்; வக்கீலும் ஆனாராம். நியூயார்க் நகரத்துக்குப் போயிருந்தவர் அவரைப் பார்த்த காலத்தில் இக்கபாத் ஒரு நீதிமன்றத்தின் நீதிபதியாக இருந்தாராம்.

சூழ்ச்சி செய்து அவரை ஊரை விட்டு விரட்டி விட்ட பிராம் என்னும் முரடன் இக்கபாத் மணக்க முயன்ற கத்திரினா என்னும் பெண்ணைப் போட்டியின்றி மணந்தான். இக்கபாத் ஊரைவிட்டுப் போய்விட்ட கதையை யாரேனும் அவனிடம் பேசிக் கொண்டிருந்தால், அதை மகிழ்ச்சியாய்க் கேட்பது அவன் வழக்கம். பூசுணைக்காயைப் பற்றிச் சொன்னதும் அவன் உரக்கச் சிரிப்பான். யாருக்கும் அதைப்பற்றித் தெரியுமுன் அவனுக்கு எல்லாம் தெரியும்.

# பரதனின் தியாகம் (2)

சு. ராஜகோபாலன்

இவ்வார்த்தைகள் இராமனுக்கு இடிவிழுந்தது போல் இருந்தன. கோடாரியால் வெட்டப்பட்ட மரம் போல், கீழே தடால் என்று விழுந்தான். இலக்குமணனும் சீதையும் அழுதுகொண்டு அவன் முகத்தில் தண்ணீரைத் தெளித்து உபசாரம் செய்தார்கள்.

மூர்ச்சை தெளிந்ததும் கதறினன். "நான் இனி அயோத்திக்கு வந்து அரசு புரிவதில் யாது பயன்? எவர் இனி என்னை இனிய சொற்களால் அறவழியிலேயே செல்லும்படி தூண்டுவார்? மேலும் அவருக்கு ஈமச் சடங்குகள் செய்ய முடியாமல் போய்விட்டது, எனக்கு இங்கும் மேல் உலகிலும் இழுக்காறு." என்று பிரலாபித்தான்.

பிறகு யாவரும் விண்ணப்பித்துக் கொண்டபடி இராமன் நதிக்குச் சென்று, தசரத மன்னனுக்குக் காட்டில் அகப்படும் சாமான்களைக் கொண்டு ஈமச்சடங்குகளைச் செய்தான்.

சிறிது நேரம் கழித்து வசிஷ்ட முனிவரும் தாய்மார்களும் வந்து சேர்ந்தனர். கௌசல்யா தேவி நதி ஓரத்தில் வரும்பொழுது, இராமன் காட்டில் அகப்படும் உணவை மன்னவனுக்கு 'பிண்டம்' வைத்திருப்பதைப் பார்த்தாள். மனங் கலங்கி விட்டது. வாடின தாமரையைப் போலும், ஈரமில்லா நீலோத்பலம் போலும்,

தூசியடைந்த தங்கம் போலும், மேகத்தினுல் மறைக்கப் பட்ட மதியைப் போலும் சீதையிருப்பதைப் பார்க்கத் துக்கம் மிகுதியாகிவிட்டது.

* * * *

பரதன் மரவுறிக் கோலம் பூண்டிருப்பது இராமனுக் குப் புரியவில்லை. பரதன் அதையும் உடன் விளக்கினுன். தனது தாயார் கொடும் பாபச் செயலைச் செய்திருந்த போதிலும் அதனைப் பொருட்படுத்தாமல் யாவரும் விரும்பியபடி இராமன் அயோத்திக்கு வந்து அரசு செலுத்த வேண்டுமென்ருன்.

இராமன் அவனைச் சமாதானப்படுத்திச் சொன்னுன்: "இப்புவியில் நாம் எப்பொழுதும் நமது இஷ்டப்படி ஒரு காரியத்தையும் நடத்த முடியாது. தெய்வ ஆணைப்படி எல்லாம் நடக்கும். எப்பொழுதும் மனிதனுக்கு மரணமும், பொருள்களுக்கு நாசமும் நிச்சயம். பழுத்த கனி மரத் திலேயே இருப்பதில்லை. இரும்புத் தூண்களால் தாங்கப் பட்ட கட்டிடங்களும் கால ரீதியில் பாழடைகின்றன. மனிதனுக்கு மூப்பு, வியாதி, மரணம் இவை பிறந்தவுடன் பின்தொடருகின்றன. யமுனைபோன்ற மாபெரும் நதிகள் முடிவில் சமுத்திரத்திற் போய் விழுகின்றன. நாம் நடக்கும்போதும் உறங்கும் போதும், யமன் நம்முடன் கூடி வந்துகொண்டிருக்கிருன். நாளுக்கு நாள் நமது ஆயுள் குறைவடைகிறது. மனைவி, மக்கள், சுற்றத்தார் நம்மைவிட்டுப் பிரிய வேண்டிய நிலையிலேயே இருக் கிருர்கள்.

"நமது பிதா தர்மச் செயல்கள் பல செய்துவிட்டு சுவர்க்கலோகம் சென்றுவிட்டார். நாம் அவர் இட்ட பணி யைச் செய்தாக வேண்டும். நீ அரசு புரிவதும் யான் வனஞ் செல்வதும் அவர் விரும்பியவை"

பரதன் சமாதானமடையவில்லை. மீண்டும் வற்புறுத்தினன். "உத்தமனே, இவ்வுலகில் உன் போன்றவர் எவருமிலர். நீ கஷ்டம் வந்தால் துக்கப் படுவதில்லை. நன்மை வந்தால் களிப்புறுவதில்லை. முற்றும் துறந்த மாமுனிவர்களே உன்னைப் போற்றுகிருர்கள். நானே துக்கத்திற்கு வசப்பட்டவன். நீ வனமிருப்பதால், ஏற்படும் துக்கத்தை என்னுல் சகித்துக் கொள்ள முடியவில்லை. நான் ஊரிலில்லாதபொழுது, என் தாய் எனக்குப் பெருங்கேட்டை விளைவித்துவிட்டாள். ஏதோ தர்ம நியதியை ஒட்டி நான் அவளைக் கொல்லாமலிருக்கிறேன். மற்ருெரு விஷயம். நான் பொது ஜனங்கள் வெறுக்கத் தக்க காரியத்தைச் செய்யமாட்டேன். நமது அரசர் நமக்கு குரு. இறந்து போனவர் நமக்கு தெய்வம் போன்றவர். இக் காரணங்களால் நான் அவரைத் தூஷிக்கக் கூடாது. எனினும், என் மனத்தில் உள்ளதைச் சொல்லிவிடுகிறேன். கேவலம் ஒரு பெண்ணுக்காகப் பெரும் கொடுமை செய்துவிட்டார். தகப்பன் செய்த அநீதியைத் தனயன் அகற்ற வேண்டுமென்று உலகத்தோர் சொல்லுவர். தவிர, நீ தவக்கோலம் கொண்டு வனத்திலிருப்பது, க்ஷத்திரிய தருமத்திற்கு ஒவ்வாது. அப்படி இருக்க வேண்டுமென்ருல் அதற்கும் ஒரு முறையுண்டு. கிரகஸ்தாசிரமம் முடிந்த பிறகுதான், வானப்ரஸ்தாஸ்ரமம் மேற்கொள்ளலாம். இல்லறத்திற்குப் பின்தான் துறவறம். ஆதலின், நீ இப்பொழுதே இங்கிருப்போர் முன்னிலையில் அயோத்தியின் அரசனுகப் பட்டாபிஷேகம் செய்து கொள்ள வேண்டும். பின்னர் எல்லோரும் அயோத்தி செல்வோம். எப்படியாவது என் தாயின் கொடுமையை அகற்றுவோமாக.

"எப்படி கடவுள் எல்லா ஜீவராசிகளிடமும் பாரபக்ஷமின்றி அன்புடனிருக்கிருரோ, அதுபோல் நீ என் மீதும்

என் பந்துக்கள் மீதும் அன்பு கொண்டு அரசை ஏற்க வேண்டும். அப்படிச் செய்ய மறுத்தால், நானும் உன்னுடன் வனத்திலேயே வாழ்நாட்களைக் கழிப்பேன்'' என்று சொன்னான்.

இராமன் இணங்கவில்லை. அங்குக் கூடியவர்களுக்கு வருத்தம் ஒரு பக்கம். களிப்பு மற்றொரு பக்கம். இராமன் உறுதியாயிருக்கிறானே என்று வருத்தம். பரதன் தியாகத்தைப் பற்றிச் சந்தோஷம். யாவரும், முற்றும் துறந்த மாமுனிவர்களும் கூட, கண்ணீர் விட்டனர். பரதனுக்கு நன்றி தெரிவித்தனர். இராமனுக்கு அஞ்சலி செய்தனர்.

குல குருவும் மிக்க மகிமை வாய்ந்தவருமான வசிட்ட முனியே இராமனைத் திரும்பி வருமாறு சொன்னார். அவர் ஒரு வித உரிமையுடனும் அதைச் சொன்னார். "பூமியில் பிறப்பவர்களுக்கு மூன்று வித குருக்கள் உண்டு-தந்தை, தாய், ஆசான். இவர்களுள் ஆசான்தான் முக்கியமானவன். ஏனெனில் வீடு பயக்கும் ஞானத்தைக் கொடுப்பவன். நான் உன் தகப்பனுருக்குக் குரு. ஆகையால் நீ எனக்குச் செவி சாய்க்க வேண்டும். நீ அயோத்திக்கு வரவேண்டும்'' என்றார்.

இராமன் சிறிதும் இணங்கவில்லை. பரதன் பார்த்தான்; வேறு வழியில்லை. சத்தியாக்கிரகம் செய்துதான் அவன் மனத்தைத் திருப்பவேண்டுமென்றெண்ணி, சுமந்திரனைக் கூப்பிட்டு, புல்லை இராமன் முன்பு பரப்பச் சொன்னான். தான் இராமன் இணங்கும்வரை அவன் முன்பு அன்ன ஆகாரமின்றி இருக்கப் போவதாகத் தீர்மானித்தான். சுமந்திரனுக்கு இதை இராமன் அங்கீகரியான் என்று தெரியும் போலும். சும்மா இருந்து விட்டான். எனவே பரதன் தானே புல்லைக் கொணர்ந்தான்.

பின்னர் பரதன் எழுந்திருந்து, தண்ணீரால் முகத்தைச் சுத்தம் செய்துகொண்டு ஒரு சிறிய உபந்யாசமும்

செய்துவிட்டான். "குருமார்களே! மந்திரிமார்களே! நகர மக்களே! கேளுங்கள். நான் என் பிதாவின் அரசை விரும்பவில்லை. என் தாயிடமும் நான் அதை வாங்கித் தரும்படிக் கேட்கவில்லை. இராமன் காடு செல்வதை நான் கனவிலும் விரும்பேன். அவன் காட்டில்தான் வசிப்பேன் என்ருல், அவனுக்குப் பதிலாக நான் பதினன்கு வருஷம் வனவாசம் செய்யச் சித்தமாயிருக்கிறேன்" என்ருன்.

இராமன் இதைக் கேட்டு ஆச்சர்யமடைந்தான். இருந்தாலும் ஒரு நுட்பமான சங்கதியைச் சொன்னுன். "தசரதன் உயிரோடு இருக்கும்பொழுது இராமன்காட்டுக் குச் செல்ல வேண்டும் என்று ஒரு பணயம் வைத்தார். அதை நம் ஒருவராலும் மாற்ற முடியாது. காட்டில் வசிப்பது தமக்கு நலந் தரும் என்று தசரத மன்னன் நிச்சயித்தார். அதைப் புறக்கணிக்க நான் விரும்ப வில்லை. நீ மகாத்மா. எல்லாம் உனக்குச் சுபமாகவே முடியும். ஆகையால் நாம் இருவரும் தகப்பன் சொல்லைக் காப்பாற்ற வேண்டும்" என்று முடிவாகத் தன் அபிப்பிரா யத்தைத் தெரிவித்தான்.

இவ்விவாதத்தை அங்கிருந்தவர்கள் மட்டுமன்றி, மேல் உலகத்தினர்களும் கண்ணுக்குப் புலப்படாமல் கேட்டுக் கொண்டிருந்தனர். இவ்விரு சகோதரர்களின் மாண்பைக் கண்டு ஆச்சர்யமடைந்தனர்.

பரதன் தைரியத்தை இழந்தான். "இவ்வளவு பெரிய அரசாங்கத்தை என்னல் தனிமையில் அரசாள முடியாது. கிருஷிகர்கள் மழையை எதிர்பார்ப்பது போல், ஜனங்கள் உன் வரவைப் பற்றிச் சிந்தித்த வண்ண மிருப்பர். அவர்களை நான் திருப்தி செய்ய முடியாது" என்ருன்.

இராமன் பரதனைத் தழுவிக்கொண்டு, "நீ வெகு சாமர்த்தியமுள்ளவன். புத்தியுள்ள மந்திரிகளை நியமித்து, அவர்களைக் கேட்டுக் கொண்டு ஆட்சி நடத்து. எப்படியிருந்தாலும் நான் என் பிரதிக்கினையை மாற்ற முடியாது" என்றான்.

பிறகு வசிட்ட முனிவருக்கு ஓர் உபாயம் தோன்றிற்று. சந்தனக் கட்டையால் செய்யப்பட்ட, தங்கப் பூச்சு உடைய இரு பாதுகைகளைக் கொண்டுவரச்சொல்லி அவற்றை இராமன் அணிந்த பிறகு அவற்றைப் பரதனிடம் கொடுக்குமாறு செய்தார். அப் பாதுகைகளை இராமனது பிரதிநிதியாகக் கருதி, அரசு செலுத்துமாறு சொன்னார்.

எல்லோரும் இந்த ஏற்பாட்டை வரவேற்றனர். பாதுகைகள் கொண்டு வரப்பட்டன. பரதன் அவற்றை வாங்கிக் கொண்டான். "நான் இவைகளையே அரசு செலுத்தச் சொல்லப் போகிறேன். பதினான்கு வருஷங்களும் இராமனைப் போல் நான் மரவுரி, ஜடை முதலியன அணிந்து கொண்டு கனிகளையும், கிழங்குகளையும் புசித்துக்கொண்டு நகரத்திற்குள் செல்லாமல், எல்லைக்கு வெளியிலேயே இருந்துகொண்டு அரசாங்க அலுவல்களைக் கவனிப்பேன். பதினான்கு வருஷங்கள் கழிந்த பின் மறுநாள் நீ வரத் தவறினால் நான் தீக்குளிப்பேன்" என்றான்.

இராமனும் இணங்கினான். பரதனையும் சத்துருக்கனையும் அணைத்துக் கொண்டு கண்ணீர் விட்டான்.

பிறகு இராமன் பரதனிடம், "உன் தாயை இனி வையாதே. கோபிக்காதே" என்று கூறினான்.

பரதன் பாதுகைகளுடன் இராமனை வலம் வந்து அவற்றைத் தலைமேல் வைத்துக்கொண்டு, சத்ருக்கனுடன் தேரிலேறினான். ஏனையோர் பின் தொடர்ந்தனர்

14 3771

பிரயாணம் துவங்கப்பட்டது. பிறகு பாரத்வாஜ முனிவரைச் சந்தித்து, அவரிடம் நடந்தவைகளைச் சொன்ஞன். அவரும் மிக்க சந்தோஷமடைந்தார். பரதனைப் போற்றினர்.

யாவரும் அயோத்திக்குச் சமீபம் வந்துவிட்டனர். நாட்டில் தசரதனில்லை, இராமனுமில்லை. நகரம் பொலிவற்று விளங்கிற்று.

நகரத்தினுள் சென்றபின் பரதன் தாய்மார்களை அவ்விடத்திலேயே இருக்கச் செய்தான். பின்பு, மந்திரிகளைக் கூப்பிட்டான். "நான் இராமனது பிரிவினுல் மிகவும் மனச் சோர்வு அடைந்துள்ளேன். எனக்கு இங்கு இருக்கப் பிடிக்கவில்லை. நான் நந்திக் கிராமத்திற்குப் போய் பதினன்கு வருஷங்களும் அங்கேயே வசிக்கப் போகிறேன்" என்ருன்.

மந்திரிகளும் சம்மதித்தனர். உடனே பரதனும் சத்ருக்கனும் இதரமேறி நந்திக் கிராமத்திற்குப் புறப்பட்டனர். அவர்களைத் தொடர்ந்து புரோகிதர்களும் முனிவர்களும் சென்றனர். பொதுஜனங்களும் தாங்களாகவே திரள் திரளாகப் பின்தொடர்ந்தனர்

பரதன் பாதுகைகளைச் சிரமேல் வைத்துக்கொண்டு, "இனி இவைதாம் அரசு புரியும். நான் அவற்றின் பிரதிநிதி; செயலாளன். இராமன் வரும் வரை நான் அவன் சார்பாக அரசு செலுத்துவேன். அவன் திரும்பி வந்து, இப்பாதுகைகளின் மீது தன் பொற்பாதங்களை வைக்கும் நாளை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். அன்று அவனிடம் இவ்வரசை ஒப்புவித்து, நான் பாபத்தினின்று விடுபடுவேன்" என்று மனம் ஒடிந்து தீனக் குரலில் சொன்ஞன்.

அன்று முதல் பரதன், மரவுரி உடுத்து, சடை தரித்து, முனிவேஷத்துடன் இருந்துவந்தான். தனது பரிவாரங்களுடன் நந்திக் கிராமத்தில் வசித்தான். பாதுகைகளின் பிரதிநிதியாக அரசு செலுத்தி, தினந் தோறும் அலுவல்களை எல்லாம் அவற்றிடம் அறிக்கை செய்தான். தினந்தோறும் அவற்றைப் பூஜித்து வந் தான்.

இவ்விதமாக இம் மகாவுத்தமன் தன் தாயால் ஏற் பட்ட கொடுமையை அகற்றினன். இராமன் அரசு செலுத்துவதை விதி தடுத்தது. அவ்விதியை மதியாலும் வெல்ல முடியவில்லை. தன் தியாகத்திஞல் வென்ருன் பரதன்.

# மக்கள் சங்கீதம்

சங்கீதம் செவிக்கினியதாகவும், உணர்ச்சியை ஊட்டுவதாகவும், முடிந்தால் சிந்தனைக்கு விருந்தாகவும், அமைய வேண்டும். இன்னிசை என்பது வெவ்வேறு ஒலிகளை அழகுபட இணைத்து ரம்மிய உணர்ச்சி தோன்றச் செய்வதாக இருக்கவேண்டும். தன்னை மறந்து பரவசமாக லயித்துவிடச் செய்யக்கூடிய சங்கீதமே சிறந்த சங்கீதம். அதற்கு என்ன பெயர் கொடுத்தாலும் ஆட்சேபனை இல்லை. அது சாஸ்திரீய சங்கீதமானாலும் சரிதான். சரள சங்கீதமானாலும் சரிதான், கிராமிய சங்கீதமானாலும் சரிதான். ஆனால், அழகுணர்ச்சியும் ரசனையுணர்ச்சியும் எல்லாரிடமும் எப்போதும் ஒன்றுபோலவா இருக்கும்? ஒவ்வொருவருக்கு ஒவ்வொன்று பிடிக்கும். அதில் தப்பு ஒன்றும் இல்லை. அது இயற்கை. ஒரு நேரத்தில் பிடிப்பது. மற்றொரு நேரத்தில் ரசிக்காது. அதுவும் இயற்கைதான். மனித அமைப்பின் வேறுபாடுகளுக்கேற்ப ரசனையும் ருசியும் வேறுபடும்.

பூர்வகுடிகள் குரலிலும் குழலிலும் இசைத்த சங்கீதம் அவர்களுக்கு வசீகரமாகத்தான் இருந்தது. மாடும், மரமும், மலையும், நதியும் அந்த இசை இன்பத்தில் லயித்தன என்று கூடக் கதைகள் உண்டு. ஆனால் இப்போது, படித்துப் பண்பட்டு நவ நாகரிகமடைந்துவிட்ட மக்களுக்கு அது எங்கே ரசிக்கிறது? பூர்வகுடிகள் சங்கீதம் மாத்திரம் என்ன, கிராமிய சங்கீதம் கூட அவர்களுக்கு ரசிப்பதில்லை. உலகம் எல்லாம் ஒன்று என்று கூறக்

கூடியபடி மனித அறிவு விரிவடைந்து, பழக்க வழக்கங்கள் மாறி, சுவையும் ருசியும் மாறிவிட்ட பின் சங்கீதத்தில் மாத்திரம் மாறுதல் தேவைப்படாதா என்ன?

நல்ல பண்பட்ட மனிதருக்கு சாஸ்திரீய சங்கீதம் இருக்கவே இருக்கிறது' என்று கூறலாம். ஆம். வாஸ்தவம்தான். வெகு நுட்பமான கலையாக, விஞ்ஞான விந்தையாக, சாஸ்திரீய சங்கீதம் உருவாகித்தான் இருக்கிறது. ஆனால் அதன் நுட்பங்களை உணர்ந்து, அதன் நயங்களைப் பாராட்டி மகிழ்வதற்கும் அதைக் கையாளுவதற்கும் அபார சாதனையும், சங்கீதத் துறையில் கல்வி கேள்வியும் வேண்டுமே. இல்லையானால், எல்லாம் வெறும் "தரன்னன்னு" வாக அல்லவா கேட்கும். பொறுமைக்கு அது சோதனையாகிவிடுமே. சாதாரண மக்கள் இந்த இரண்டு எல்லைகளுக்கும் மத்தியில் உள்ளவர்கள். அவர்களுக்குப் பூர்வகுடிகளின் சங்கீதம் ரசிக்காது; சாஸ்திரீய சங்கீதமும் புரியாது. நடுத்தரப்பட்ட சங்கீதம் தேவை. இலக்கியத் துறையில் மூளையை மிகவும் குழப்பிவிடாமல் நல்ல பொழுதுபோக்காக அமைந்துள்ள ரசமான புத்தகங்கள் இல்லையா அதுபோலவே சங்கீதத்திலும் நடுத்தரப் பிரிவு சங்கீதம் அவசியம்.

விஸ்தாரமான கலை அனுபவமும், விஷய அறிவும், புதிய துறைகளைத் தைரியமாகக் கையாண்டு பரீட்சிக்கும் திறமையும், நல்ல கற்பனைசக்தியும், பிறரை ரசிக்க வைக்க வேண்டும் என்ற ஆசையும் உள்ளவர்கள் இந்த நடுத்தர சங்கீதத்தை வளர்க்கத் தகுந்தவர்களாக இருப்பார்கள். இதை நாம் சரள சங்கீதம் என்றோ, மெல்லிசை என்றோ, லகு சங்கீதம் என்றோ குறிப்பிடலாம்.

இந்த மெல்லிசையின் போக்காவது கிராமிய சங்கீதத்தைப் போல் லகுவான போக்கில் இருக்க வேண்டும்,

ஆனால், அதே சமயத்தில், அதில் சாஸ்திரீய சங்கீதத்தைப் போல் வகை வேறுபாடுகளும், மெட்டு வேறுபாடுகளும் பொருந்தியிருக்க வேண்டும். மேலும் அதில் சாகித்தியம் சிறப்பாக அமையவேண்டும்.

சாகித்தியம் என்றால் ஏதோ அங்குமிங்குமாக வார்த்தைகளைப் பொறுக்கி எடுத்துச் சேர்த்துவிடுவது என்று கருதிவிடக்கூடாது, கொஞ்ச காலத்துக்கு முன் வரை பாடல்கள் படிப்பதற்காக எழுதப்பட்டன என்று கூறலாம். பாடுவதற்காக, இசை பொருத்தும் விதத்தில் இயற்றப்பட்ட பாடல்களைத்தான் நல்ல சங்கீதப் பாடல்களாக ஏற்கமுடியும்.

சாதாரண மக்கள் ரசிக்கத்தக்க சரள சங்கீதம் அல்லது மெல்லிசைக்கு ஒரு தேவை ஏற்பட்டதை உணர்ந்த சிலர் சாகித்தியத்தின் தரத்தைக் கவனிக்காமல், பாடிக் குவித்துவிட்டார்கள். இதற்காக அவர்கள் அந்நிய நாட்டு பாணிகளைத் தாராளமாகக் "காப்பி" யடித்து, புதிய சங்கீத மெட்டுகளை உருவாக்கினார்கள். பணமும் பெருக்கினார்கள்.

அதே சமயத்தில், சங்கீதத் துறையில் ஈடுபட்டவர்களும், இலக்கியத் துறையில் ஈடுபட்டவர்களும் சும்மா இருக்கவில்லை. அவர்களும் தேவையை உணர்ந்து பல வகைகளில் மெல்லிசையை உருவாக்க முனைந்தார்கள். தமிழில் தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி, திருப்புகழ் முதலிய பக்திப் பாடல்களும், குறவஞ்சி நாடகக் கீர்த்தனைகள், புராணக் கீர்த்தனைகள், சித்தர் பாடல்கள், முதலிய எத்தனையோ ஆதாரங்களும் இதற்கு உதவுகின்றன.

சாஸ்திரீய சங்கீதத்திலுள்ள சரளமான அமைப்புக்களை அனுசரித்தும் மெல்லிசை உருவாக்கப்படுகிறது.

ஹிந்துஸ்தானி, பஞ்சாபி முதலிய மொழிகளில் இதே போல் தும்ரி, டட்ரா, பஜன் முதலிய பாணிகளை அனுசரித்து மெல்லிசை உருவாக்கப்படுகிறது.

சிறிது காலமாக அகில இந்திய வானொலி நிலையம் சாதாரண மக்களின் இசைத் தேவையைப் பூர்த்தி செய்ய முயன்று வருகிறது சாகித்தியத்தையும் சங்கீதத்தையும் பிணைத்து செவிக்கும் சிந்தனைக்கும் களிப்பூட்டும் மெல்லிசையை அது உருவாக்கி வருகிறது. கிராமிய சங்கீதம் நாட்டுப் பாடல்கள், தேவார, திருவாசக, திருப்புகழ், பிரபந்த வகைகள், சாஸ்திரீய சங்கீதம் ஆகிய பல ஆதாரங்களையும் தாராளமாகப் பயன்படுத்தி அது மெல்லிசையை வளர்த்து வருகிறது. போதுமான அளவுக்கு மெல்லிசை அம்சங்களை விருத்தி செய்வதும், கவிதைகள், பாடல்கள் முதலியவைகளை இயற்றுபவர்கள், பாடல்களை ஸ்வரப்படுத்தி இசை வகுப்பவர்கள், பாடுபவர்கள் முதலியவர்களைக் கண்டுபிடித்து வாய்ப்பளித்து மெல்லிசையைப் பரப்புவதற்கு வழி செய்வதும் அகில இந்திய வானொலி நிலைய மெல்லிசைப் பிரிவின் நோக்கம். இப்போது ஏழு வானொலி நிலையங்களில் மெல்லிசைப் பிரிவுகள் இருக்கின்றன. ஒவ்வொரு பிரிவிலும் தயாரிப்பாளர் (புரொட்யூசர்) ஒருவரும், இசைப்படுத்துபவர் ஒருவரும், பாட்டெழுதுபவர் ஒருவரும் பல பாடகர்களும் இருப்பார்கள். ஒரு பாட்டு சரியாக உருவாகி, சங்கீத உருவெடுப்பதற்குப் பல பேர் சேர்ந்து கூட்டாக வேலை செய்தாக வேண்டும். பல முறை ஒத்திகை நடத்திப் பார்க்கப்பட்ட பின்னரே அது இறுதியாக ஏற்றுக் கொள்ளப்படும். இதுவரையில் இப்பிரிவுகள் 1500 புதிய பாடல்களை இயற்றியிருக்கின்றன.

# பெரம்பூர் ரயில் பெட்டித் தொழிற்சாலை

தேசம் சுதந்திரம் பெற்றபின் இந்திய சர்க்கார் ரயில் சாதனங்கள் விஷயத்தில் துரிதமாய்த் தன்நிறைவு அடைவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். ரயில் என்ஜின்கள் உற்பத்திக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள சித்தரஞ்சன் தொழிற்சாலையும், டாட்டா என்ஜின் உற்பத்திச்சாலையும் நம் நாட்டுக்குத் தேவையான ரயில் என்ஜின்களை அனேகமாகப் பூர்த்தியாகத் தயாரித்துவிடும். சரக்குகளுக்கான வாகன்கள் தயாரிப்பைப் பிரதானமாக தனியார் தரப்பு உற்பத்தி மூலம் பெறவேண்டும் என்பது தான் கொள்கை. தற்போது ஆண்டொன்றுக்குப் பன்னிரண்டாயிரம் வாகன் முதல் பதினையாயிரம் வாகன் வரை உற்பத்தி செய்யத் தனியார் தரப்புத் தொழில்களுக்குள்ள சக்தியை அபிவிருத்தி செய்ய சர்க்கார் முயன்று வருகிறது. ரயில்வேக்கு வேண்டிய இதர சாதனங்கள் பல இப்போது இறக்குமதி செய்யப்படுகின்றன.

பிரயாணிகளுக்கான ரயில் பெட்டிகள் நமக்கு ஏராளமாக வேண்டும். தேசத்துக்குச் சுதந்திரம் கிடைத்த சமயத்தில் ரயில் பெட்டிகள் நிலவரம் மிகவும் சிரமமாக இருந்தது. 1939-ல் இருந்த நிலைமையைவிட 1947-ல் நிலைமை மிகவும் மோசமாகிவிட்டது. ஆனால் பிரயாணிகள் போக்குவரத்து அமோகமாக அதிகரித்துவிட்டது. அதனால் நெரிசலும் சங்கடமும் அதிகமாகிவிட்டன. இந்த நிலைமையை நிவர்த்திக்க உடனடியாக வெளிநாடுகளிலிருந்து ஏராளமான ரயில்பெட்டிகளைத் தருவிக்க

வேண்டியிருந்தது. ஆனால், இந்தியாவின் தேவையையும், நாட்டிலுள்ள உற்பத்தி வசதிகளையும் கவனித்தால், ரயில் பெட்டித் தயாரிப்புக்கென்றுத் தனியாக ஒரு பெரிய தொழிற்சாலையை ஏற்படுத்துவது அவசியம் என்பது சர்க்காருக்குத் தெளிவாகத் தெரிந்தது. 1948-ல் இந்திய அரசாங்கம் ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தி, அங்கே பிராட்கேஜ் ரயில் பெட்டிகளைத் தயாரிக்கவேண்டும் என்று முடிவு செய்தது.

இத்தொழிற்சாலையில் தயாரிக்கப்பெறும் ரயில் பெட்டி லேசானதும், முழுமையும் உலோகத்தாலானதும், விசாலமான அமைப்புள்ளதுமான குழல் உருவ ரகத்தில் தான் இருக்கவேண்டும் என்று முடிவு செய்தது. இதற்கான உருவ அமைப்பை சமர்ப்பித்த ஸ்விட்சர்லாந்து தேச ஸ்தாபனத்தின் திட்டம் அங்கீகரிக்கப்பட்டது.

இந்த ரக ரயில்பெட்டியின் அநுகூலங்கள் வருமாறு:

(1) இந்த ரயில் பெட்டியின் சகல உறுப்புக்களும் நன்ருக இணைக்கப்பட்டு, ஒரே துண்டில் உருவாக்கப் பட்டதுபோல் ஏகாண்டரகமாக இருப்பதால், பெட்டியைப் பாதிக்கிற அழுத்தங்கள், இழுப்புகள், பளு முதலிய சகல விதமான சக்திகளையும் அந்தப் பெட்டி முழுவதுமே ஒரு சேரத் தாங்கிக் கொள்கிறது. அதனல் அதற்குத் தாங்கும் சக்தி அதிகமாக இருக்கிறது. குறைந்தபட்ச கனமுள்ள பெட்டி அதிக பாரத்தையும் சிரமத்தையும் தாங்கிக் கொள்ள முடிகிறது. சாதாரண ரயில்பெட்டிகளின் கனம் 42 டன்ஞக இருக்க, இந்தப் பெட்டிகளின் கனம் 35 டன்தான்.

(2) இந்த ரகப் பெட்டிகள் ஒன்றுக்குள் ஒன்று புகுந்துவிட முடியாதபடி தயாரிக்கப்படுகிறது. ரயில்

விபத்து ஏற்பட்டு, ஒன்றொடொன்று மோதிக்கொள்ள நேர்ந்தால், இப்பெட்டிகள் ஒன்றுக்குள் ஒன்றாக நசுக்கி விடமாட்டா.

(3) இப்பெட்டிகளில் அதிர்ச்சிகளைத் தாங்குவதற்கான விசேஷ சாதனங்கள் உள்ளன; சுருள் சுருளான வில்பூட்டிய இருசுகளின் தாங்கலில் இப்பெட்டிகள் அமைக்கப்படுகின்றன. எனவே, பிரயாணம் மிகவும் சுகமாக இருக்கும். போகி வண்டிகள் அதிநவீன, ஸ்விஸ் ரக உருவ அமைப்புள்ளவை. உறுப்புகள் எல்லாம் பற்ற வைத்து இணைக்கப்பட்டவை. இருசுப் பெட்டிகள் எஸ். கே. எப். ரோலர் பெயரிங் முறையில் பொருத்தப்பட்டிருக்கின்றன.

(4) ரயில் பெட்டிமீது லிம்பெட் ஆஸ்பெஸ்டாஸ் கலவை "ஸ்பிரே" பூச்சு பூசப்படும். அதனால் உஷ்ணமும் இரைச்சலும் உள்ளே போகாமல் அதிகத் தடைப் பாதுகாப்பு கிடைக்கும்.

இவ்வளவு முக்கியமான தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கு எந்த இடம் மிகவும் பொருத்தமானது, வசதியானது என்று தீர ஆராய்ந்து, இறுதியில் சென்னை பெரம்பூர்தான் இதற்கு உகந்த ஸ்தலம் என்று முடிவு செய்யப்பட்டது. ஏற்கெனவே அங்கே முக்கியமான ரயில்வே பட்டறை இருந்தது; தொழிற்சாலை அமைப்பதற்கு ரயில்வே மனையிடமும் இருந்தது. சாமான்களைக் கொண்டு சேர்ப்பதற்கு ரயில்போக்கு வரத்து வசதியும் இருந்தது. பெரிய நகரத்துக்கு அருகில் இருப்பதால், தொழிற்சாலை ஊழியர்கள் எல்லோருக்கும் புதிதாக இருப்பிட வசதியை உடனே ஏற்படுத்த வேண்டும் என்ற கட்டாயமும் இல்லை.

ரயில் பெட்டித் தொழிற்சாலைக்குத் தேவையான யந்திரங்கள் எல்லாம் உரிய காலத்தில் கிடைப்பதற்காக

முன்கூட்டியே ஏற்பாடு செய்யப்பட்டது. கட்டிடங்களும் பட்டறைகளும் கட்டப்பட்டவுடன் வேலை துவங்குவதற்கு ஏற்றபடி யந்திரங்களுக்கு ஆர்டர்கள் கொடுக்கப் பட்டிருந்தன.

கூடுமான மட்டிலும் உள்நாட்டு யந்திரங்களே வாங்கப்படுகின்றன; ஆனல், இந்தியாவில் யந்திரக் கருவிகள் தயாரிப்பு அவ்வளவாக அபிவிருத்தியடையாதபடியால், பெரும்பாலான யந்திர சாதனங்களையும் வெளிநாடுகளிலிருந்தே இறுக்குமதிசெய்ய வேண்டியதாக இருந்தது. யந்திரங்களுக்கு நாம் ஆர்டர் கொடுத்த நாடுகள் அவைகளைச் சாதகமான விலையில் சீக்கிரமாகத் தந்துள்ளன. ஜெர்மனி, ஸ்விட்சர்லாந்து, பிரிட்டன், ஸ்வீடன், செக்கோஸ்லாவாகியா, பிரான்ஸ், பெல்ஜியம், இத்தாலி ஆகிய பல நாடுகள் யந்திரங்களை அனுப்பியுள்ளன. மொத்தம் 544 யந்திரங்கள் வாங்கப்பட்டுள்ளன.

மூலப் பொருள்களும் சரியான காலத்தில் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. உள்நாட்டு மூலப் பொருள்களையே பிரதானமாக வாங்க உத்தேசிக்காவிட்டாலும் இந்த ஆரம்ப கட்டத்தில் வெளிநாடுகளிலிருந்து தான் பெரும்பாலான உருக்கும் வாங்கப்பட்டிருக்கிறது. இந்தியாவில் உருக்கு உற்பத்தி பெருகியபின் நம் தேவை முழுவதும் உள் நாட்டிலேயே வாங்கப்படும்.

இத்தொழிற்சாலைக்கான ஊழியர்கள் தொழில் நுட்பம் வாய்ந்தவர்களாக இருப்பது அவசியம். அதற்காக அவர்களுக்கு விசேஷப்பயிற்சிஅளிக்கவேண்டும். எனவே 1954-ஆம் ஆண்டு மார்ச் மாதம் தொழில் நுட்பப் பயிற்சிப் பள்ளிக்கூடம் ஒன்று திறக்கப்பட்டது. ஏற்கெனவே தொழில் நுட்பத் துறையில் ஓரளவு பயிற்சிபெற்ற மாணவர்கள் இதற்காகத் தெரிந்தெடுக்கப்பட்டுப் பற்பல துறை

களிலும் விஸ்தாரமான பயிற்சி அளிக்கப்பட்டனர். அப் பயிற்சிப் பள்ளி, தொழில் பயிற்சிக்கு ஒரு லட்சியப் பள்ளிக்கூடம் போல் அமைந்துள்ளது. தொழில் நுட்ப வசதிக்கு இந்த ஏற்பாட்டைச் செய்ததன் மூலம், தொழிற் சாலை உருவானவுடன் உற்பத்திவேலை துவங்குவதற்கு வசதி ஏற்பட்டுவிட்டது.

பயிற்சி விஷயத்தில் விசேஷ கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அனுபவப் பயிற்சி வற்புறுத்தப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு துறை மாணவர்களையும் மேற்பார்வையிட்டுப் பயிற்சியளிப்பதற்காக, ஒவ்வொரு பிரிவிலும் ஒரு ஸ்விஸ் நிபுணர் நியமிக்கப்பட்டிருக்கிறார். நம் மாணவர்களின் பயிற்சித் திறம்பற்றி அந்நிபுணர்கள் விசேஷ திருப்தி கொண்டிருக்கின்றனர். முற்போக்கான மேனாட்டுத் தொழில் நுட்ப ஊழியர்களுக்குச் சமமான திறமையுள்ள ஊழியர்களாக அவர்கள் திகழ்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவர்கள் தவிர, வெளிநாடு சென்று இந்தத் துறை சம்பந்தமாகப் பயிற்சி பெற்றுவருவதற்கும் பல ஊழியர்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். இந்திய ரயில்வே பட்டறைகளிலிருந்து சூபர்வைசர்களும் தொழிலாளர்களும் இதற்காகத் தெரிந்தெடுக்கப்பட்டனர். ஸ்விட்சர்லாந்தில் ஆறு மாதம் முதல் பன்னிரண்டு மாதம் வரையில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இது வரையில் 40 பேர் பயிற்சி முடிந்துவந்திருக்கிறார்கள். இன்னும் 19 பேர் இப்போது ஸ்விட்சர்லாந்தில் பயிற்சி பெற்றுவருகிறார்கள்.

முற்றிலும் இணைப்பு உருவமுள்ள இந்த ரக ரயில் பெட்டிகள் நம் நாட்டுக்குப் புதியவை ஆகையால், இவைகளின் தயாரிப்பில் நம் யந்திர என்ஜினியர்களுக்கு அதிக

முன் அனுபவம் இல்லே. எனவே, அனுபவமுள்ள வெளி நாட்டு ஸ்தாபனங்களிடமிருந்து அந்த வேலே முறைகளே அவர்கள் தெரிந்துகொள்ளும்படி செய்யவேண்டியிருந் தது. இதற்காக முன் சொன்ன ஸ்விட்சர்லாந்து எஞ்ஜி னீயரிங் ஸ்தாபனத்துடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொள் ளப்பட்டது. அந்த ஒப்பந்தப்படி, பெரம்பூர் தொழிற் சாலேயில் இந்த முழு இணைப்பு உருவ ரயில்பெட்டி உற் பத்திக்கு ஏற்பாடு செய்து தருவதற்கும், யந்திர சாதனங் களின் விவர நுட்பங்களே வகுத்துத் தருவதற்கும், தொழி லாளர்களுக்குத் தங்கள் ஸ்தாபனத்தில் பயிற்சி வசதி அளிப்பதற்கும், இத்தொழிற்சாலேயில் வேலே பார்ப்பதற் காகத் தொழில் நுட்ப நிபுணர்களே அனுப்பித் தருவதற் கும் அந்த ஸ்தாபனம் ஒப்புக் கொண்டது. உற்பத்தி லட்சிய அளவு பிரகாரம் தொழிற்சாலேயில் உற்பத்தி நடப்பதை அனுசரித்தே அந்த ஸ்தாபனத்துக்குச் சர்க்கார் ஆலோசனேக் கட்டணத்தைக் கொடுக்க வேண்டுமென்ப தும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

இந்தத் தொழிற்சாலேயில் உற்பத்தியாகும் ரயில் பெட்டிகள் படிப்படியாக இந்திய மூலப்பொருள்களேக் கொண்டே முற்றிலும் தயாராவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டது. உற்பத்தி துவங்கிய 2-வது வருஷத்தில் 20 ரயில் பெட்டிகள் உள்நாட்டு மூலப் பொருள்களால் தயா ரிக்கப்படவேண்டும் என்றும், 5-வது வருஷத்தில் எல்லா பெட்டிகளுமே இந்தியப் பொருள்களால் தயாரானவை யாக இருக்கவேண்டும் என்றும் ஒப்பந்தம் செய்துகொள் ளப்பட்டது.

பெரம்பூர் ரயில்பெட்டி உற்பத்திசாலே போன்ற பிரமாண்டமான ஒரு தொழிற்சாலேயில் நிர்மாண வேலேயை விவரிப்பதென்ருல் அது மிக ரசமாகவே இருக் கும். அதற்குத் திட்டமிட்டு, படங்கள் வரைந்து

ஆயிரக்கணக்கான ஆட்களைக்கொண்டு தீவிர வேலை செய்வித்து, சகல சங்கடங்களையும் சமாளித்து, குறித்த காலத்தில் அது வேலை செய்யத் தொடங்குமாறு வேலையைப் பூர்த்தி செய்த அத்தனை காட்சிகளும் கண்முன் வரும் போது புளகாங்கிதமேற்படத்தான் செய்யும்.

ஸ்தலத்திலுள்ள பூமி படை படையாய் வண்டல்கள் படிந்து சேர்ந்ததென்றும், அதனால் அது எளிதில் அழுத்தத்துக்குள்ளாகக் கூடியதென்றும் தெரிய வந்தது. எனவே, தூண்கள் எல்லாம் இரும்பு முளையடித்து 'ரீயின் போர்ஸ்ட் காங்க்ரீட்' மூடி போட்ட அஸ்திவாரத்தின்மீது அமைக்கப்படவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

'ரீயின்போர்ஸ்ட் காங்க்ரீட்' கட்டைகள் பரப்பி அஸ்திவாரம் போட்டால் யந்திரங்களின் வரிசை அமைப்புக்கு இடைஞ்சலாக இருக்கும்; தூண்களுக்கிடையே இருக்கக் கூடிய இடத்தையும் குறுகலாக்கிவிடும். அதனால் இந்த் முறை கையாளப் படவில்லை.

தொழிற்சாலையில் உற்பத்தி வேலை எந்தக் கிரமப் படி நடைபெறவேண்டுமோ அந்தக் கிரமத்தை ஒட்டியே பட்டறை வரிசைகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. மொத்தம் பத்துப் பட்டறைகள் இருக்கின்றன. கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் யந்திர என்ஜினியர்களுடன் கலந்து ஆலோசிக்கப்பட்டது. யந்திரங்கள் வேலை செய்யும்போது இருக்கவேண்டிய வசதிகளைக் கவனித்து கட்டிட நிர்மாணம் அமையும்படி செய்வதற்கு இந்தக் கூட்டு ஆலோசனை உதவி செய்கிறது. இல்லையானால், வேலை தாமதமாகும்; உற்பத்தித் திறமை குறையும். அதற்கு வழி ஏற்படாமல் இப்படி முன்கூட்டியே அவர்களுடன் கலந்து ஆலோசனை செய்யப்பட்டது.

வெளிச்சம் நன்ருக இருக்கும்படி கூரையில் 30 சதவிகித இடத்துக்குக் கண்ணுடி உபயோகிக்கப்பட்டிருக்கிறது. தூண்களுக்கு மத்தியிலுள்ள இடைச்சுவர் அகலம் 50 அடியாக வைத்திருக்கிறது. சித்தரஞ்சன் தொழிற்சாலையில் அது நாற்பது அடியாக இருக்கிறது: ஆனல், அந்த அகலத்துக்குள் மூன்று வரிசை யந்திரங்களை வைப்பது சாத்தியமில்லை. 50 அடி அகலமிருந்தால், மூன்று வரிசை வைக்கலாம். இப்போதைக்கு இரண்டு வரிசை யந்திரங்கள் தான் இருக்கும்.

மூலப் பொருள்களையும் சாதனங்களையும் ஒவ்வோர் இடத்துக்கும் எடுத்துச் செல்வதற்கு உயரத்திலுள்ள பாரந் தூக்கிகள் (கிரேன்) உதவி செய்கின்றன. அவை பட்டறைகளுக்கு இடையிலுள்ள ஸ்தலத்தில், சாதாரணமாக 80 அடி தூரத்துக்கு, அந்தச் சாதனங்களை எடுத்துச் செல்லும். தொழிலாளர்களின் உடல் சிரமம் இதனல் குறைந்துவிடுகிறது.

இத்தொழிற்சாலையின் பிரதான பட்டறை, பல பாகங்களை ஒன்று சேர்த்து உருக்கொடுக்கும் பூட்டுப் பட்டறை (அசெம்பிளி ஷாப்) தான். அது மிகவும் உன்னதமான ஒரு கட்டிடம். அதைத் தொழில் உலகக் கோயில் என்று வர்ணித்தால் மிகவும் பொருந்தும். அதன் நீளம் 1000 அடி; அகலம் 260 அடி; உச்சிவரை உயரம் 55 அடி; 33 அடி உயரத்தில் இயங்குகின்ற நான்கு 20 டன் பாரந் தூக்கிகளும், இன்னும் பல 5 டன் பாரந் தூக்கிகளும் தயாரிப்பு வேலைக்கு உதவியாக இருக்கின்றன. அகலத்தில் தூண்களுக்கிடையே இரண்டு 80 அடிச்சுவர்களும், இரண்டு 50 அடிச் சுவர்களும் உள்ளன.

இந்தப் பிரதான பட்டறையை நிர்மாணிப்பதில் பல சிக்கன முறைகளும், வேலைச் சுளுவு முறைகளும் கையாளப்பட்டிருக்கின்றன. துரிதமாக வேலை பூர்த்தியாகும்படி

பல உறுப்புக்கள் பட்டறைகளில் பற்ற வைக்கப்பட்டும், பல உறுப்புக்கள் ஸ்தலத்திலேயே பற்றவைக்கப்பட்டும் இணைக்கப்பட்டிருக்கின்றன. மறையாணிகள் போட்டு முடுக்குவதன் மூலம் நிர்மாண வேலை துரிதமாக்கப்பட்டிருக்கிறது.

கட்டிட வேலைக்கான உறுப்புக்கள் எல்லாம் தர நிர்ணயம் செய்யப்பட்டு ஒரே ரீதியில் இருக்கும்படி செய்யப்பட்டிருக்கின்றன. அதனால், பாகங்களை இணைத்துப் பூட்டுவது சுலபமாகியிருக்கிறது.

கூரைக்குப் பெரிய ஆஸ்பெஸ்டாஸ் தகடுகள் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. அதிக வெளிச்சம் கிடைப்பதற்காக இடையே இடம் விட்டு இரண்டு பகுதிகளாகக் கண்ணாடி பொறுத்தப்பட்டிருக்கிறது. பக்கச் சுவர்களில் வெளிச்சமும் காற்றும் உள்ளே புகக்கூடியபடி காங்க்ரீட் தகட்டுப் பலகணி (லூவர் ஓப்னிங்) வேலை செய்யப்பட்டிருக்கிறது. பட்டறைகள் குளிர்ச்சியாக இருப்பதற்கு இவை எல்லாம் துணை செய்யும்.

தொழிற்சாலை முழுவதும் கெட்டியான காங்க்ரீட் தளம் போடப்பட்டிருக்கிறது. கனமான யந்திரங்களை வைக்கும் இடங்களில் தனிப்பட கெட்டி அஸ்திவாரமும் இடப்பட்டிருக்கிறது.

மின்சாரக் கம்பிகள், டெலிபோன் கம்பிகள், அழுத்த வேகக் காற்றுக் குழாய், தண்ணீர்க் குழாய் ஆகியவற்றைக் கொண்டு செல்ல மடைகள் அமைக்கப்பட்டுப் பூமி மட்டத்துக்குச் சமமாக அளிமுடிகள் போடப்பட்டுள்ளன. கம்பிகள், குழாய்கள் எல்லாம் மடைகளிலேயே போகுமாதலால் தளம் அழகாக இருக்கும்; இந்த நவீன முறைதான் மேனாடுகளில் இப்போது கையாளப்படுகிறது.

பட்டறைகளுக்கிடையில் போக்குவரத்துக்குக் காங்க்ரீட் ரஸ்தாக்களும், ரயில் பாதைகளும் இருக்கின்றன.

தொழிற்சாலையை அடுத்து 14·93 லட்சம் ரூபாய் செலவில் நாலு மாடியுள்ள காரியாலயக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. இரும்புக் கம்பிகள் இறக்கி அஸ்திவாரமிட்டு, உருக்குச் சட்டம் நிர்மாணித்துக் கட்டிடம் கட்டப்பட்டிருக்கிறது. இக்கட்டிடம் முழுவதும் சம சீதள நிலையுள்ளதாக்கப்பட்டிருக்கிறது. இக் கட்டிடத்தின் தரைத் தள விஸ்தீரணம் 59·252 சதுர அடி.

இரண்டடுக்குக் கட்டிடம் ஒன்றில் சிற்றுண்டிச்சாலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

வேலை நடப்பதை மேற்பார்வையிடுவதற்கு வசதியாக, ஒவ்வொரு பட்டறையிலும் கூரை உயரத்தில் "போர்மன்" நிலையம் ஒன்று இருக்கும். அதன் சுவர்கள் கண்ணாடியால் அமைக்கப்படும்.

இவ்வளவு பெருமளவில் கட்டிட வேலை நடக்கும் போது பாரந் தூக்கிகள், ரஸ்தா உருளைகள், காங்க்ரீட் கலவை யந்திரங்கள் போன்ற யந்திர சாதனங்களை நிர்வாகிகளே வாங்கி, கட்டிட வேலை ஒப்பந்தக்காரர்களுக்கு இலவச உபயோகத்துக்கோ, வாடகைக்கோ கொடுத்தால் வேலை சுளுவாக நடக்கும் என்ற கொள்கையை அனுசரித்துப் பல விதமான கட்டிட வேலை யந்திரங்கள் வாங்கப்பட்டு அவர்களது உபயோகத்துக்குக் கொடுக்கப்பட்டன.

மராமத்துப் பட்டறை ஒன்றும் ஏற்படுத்தபட்டிருந்தது. மராமத்து வேலையோடு கூட, சில சில்லறை உபகரணங்களைத் தயாரிப்பதற்கும் அது வசதியாக இருந்தது.

தொழிற்சாலை வேலை நடக்கும்போதே, தொழிலாளர்கள் குடியிருப்புக்கான கட்டிடங்களும் கட்டப்பட்டு வந்தன. அவைகளில் கட்டிட வேலைத் தொழிலாளர்களுக்கு

ஜாகை வசதி செய்யப்பட்டது. அதனுல் தற்காலிகமாய்ப் பல ஜாகைகளை அமைப்பதற்கு அவசியமில்லாமற் போயிற்று.

22·8 லட்ச ரூபாய் செலவில் 33 ஏக்கரா மனையிடத்தில் கட்டப்பட்டுள்ள இந்தக் குடியிருப்புக்கும் சென்னை நகரத்துக்கும் போய்வர போக்குவரத்து வசதி நன்ருக அமைந்திருக்கிறது. மிகச் சிறிய வீட்டிலும்கூட, சகல வசதிகளும் இருக்கின்றன. மின்சாரம், தண்ணீர், ரஸ்தா, பூங்கா, முதலிய சகல சௌகரியங்களும் செய்யப்பட்டுள்ளன.

இக்குடியிருப்புகளிலுள்ளவர்கள் அங்கேயே ஆடு மாடுகளை வைத்து வளர்க்க முடியாது; ஆனுல் சற்று தூரத்தில் பொதுத் தொழுவங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அங்கே அவர்கள் தங்கள் கால்நடைகளை வைத்துப் பராமரிக்கலாம்.

குடிதண்ணீருக்காக என்னூரிலிருந்து தண்ணீர் கொண்டு வரப்படுகிறது. அந்த ஜல வசதித் திட்டம் தென் பிராந்திய ரயில்வே, ரயில் பெட்டித் தொழிற்சாலை ஆகியவைகளின் கூட்டு முயற்சியாகும். அதற்கு 11·5 லட்சம் ரூபாய் செலவாகிறது.

தேசத்திலுள்ள முக்கியமான ஒரு தொழிற்சாலையாக அமைந்துள்ள பெரம்பூர் ரயில்பெட்டித் தயாரிப்புச்சாலை சம்பந்தமான பல புள்ளி விவரங்கள் கீழே தரப்பட்டிருக்கின்றன:

(1) தொழில் பட்டறைகளின்
தள விஸ்தீரணம் ... 8, 48, 600 சதுர அடி.

(2) கொட்டகைகள் எண்ணிக்கை ... 10

(3) இத்திட்டத்துக்குத் தேவைப்பட்ட
உருக்கு ... 9, 500 டன்

(4) உள்ளே போடப்பட்டுள்ள
ரயில்பாதை நீளம் ... 12 மைல்

(5) பட்டறைகளிலுள்ள
ரஸ்தாக்களின் நீளம் ... 3·4 மைல்

(6) தொழிலாளர் குடியிருப்பில்
ரஸ்தா நீளம் ... 3 மைல்

(7) வீடுகள்
... 400 தொகுதிகள்

(8) தண்ணீர் சப்ளை குழாய் நீளம் ... 16 மைல்

(9) சிமிட்டி உபயோகம் ... 19, 500 டன்

(10) தொழிற்சாலையிலுள்ள யந்திரங்கள் எண்ணிக்கை
பொதுவானவை 549
விசேஷ வேலைகளுக்கானவை 60

(11) சட்டங்களும் பொருத்துமானங்களும்
(ஜிக்ஸ், பித்ஸ் சர்ஸ்) 750

(12) குளிரவைப்பதற்கான தண்ணீர்,
எண்ணெய், காற்றுக்குழாய்கள் நீளம் ... மைல்

(13) அழுத்து விசை சாதன
சக்தி (கம்பிரஷர்) ... நிமிஷத்துக்கு 8,250 கனஅடி/

(14) பாரந்தூக்கி சாதனங்களும் இடம் மாற்றும்
சாதனங்களும் (கிரேன்ஸ், டிராவர்சர்ஸ்) :

(அ) உயரத்திலுள்ள 20 டன் கிரேன் ... 4

(ஆ) 5 டன் ... 26
(இ) இடமாற்று சாதனம் 75 டன் ... 2

(15) தொழிலாளர் எண்ணிக்கை ... 4,000

(16) ஒரே (ஷிப்ட்) விடுதி வீதம்
வேலை நடந்தால்
உற்பத்தி .... 350 ரயில் பெட்டிகள்

(17) மின்சார உபயோகம்
வருஷமொன்றுக்கு ... 60 லட்சம் யூனிட்டு

(18) திட்டத்துக்கான
மொத்தச் செலவு ... 7·35 கோடி ரூபாய்

# செய்திக் கோவை

எல்லைப்புற காந்தி

எல்லைப்புற காந்தி கான் அப்துல் காபர்கான் பலுசிஸ்தானத்தில் ஸிபி என்னுமிடத்தில் கைது செய்யப் பெற்றார். எல்லைப்புற அரசாங்கத்தின் தடை உத்தரவை மீறியதாலேயே இவ்வாறு நேர்ந்தது. மேற்குப் பாகிஸ்தானை, மக்கள் சம்மதமின்றி ஒருறுப்பு மாகாணமாக ஏற்படுத்துவதை எல்லைப்புற காந்தி கண்டித்துப் பிரசாரம் செய்தார். இந்தப் பிரசாரத்தைத் தொடர்ந்து நடத்தவே அவர் பலுசிஸ்தான் சென்றார்.

'பிரிட்டிஷ் ஆட்சியில் கூட பலுசிஸ்தானத்தில் பிரவேசிக்கக் கூடாதென்று காபர்கான் மீது தடை விதிக்கப்படவில்லை. ஆனல் தேசீய அரசாங்கம் இவ்வாறு தடை விதித்தது வருந்தத் தக்கது' என்று பலுசிஸ்தான் காந்தி ஸமாத்கான் கூறினர்.

காபர்கானைக் கைது செய்தது, ஜனநாயகத்தையும் மனித வர்க்கத்தையும் பழிப்பதாகுமென பல பொதுக் கூட்டங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன. சில தினங்களுக்குப் பின் காபர்கான் நிபந்தனையின்றி விடுதலை செய்யப் பெற்றார்.

பாகிஸ்தான் அரசாங்கத்தாரால் காபர்கான் ஐந்து வருஷங்களுக்கு அதிகமாகவே காவலில் வைக்கப்பட்டிருந்தார். அவர் 1954-ஆம் வருஷம் ஜனவரி மாதத்தில் விடுதலை செய்யப்பட்டார். ஆனல் அந்த வருஷம்

ஜூலை மாதம் வரை அவருடைய நடவடிக்கைகள் கட்டுப் படுத்தப்பட்டிருந்தன.

எல்லைப்புற காந்தியின் சகோதரரான டாக்டர் கான்சாகிப், ஒருறுப்பு மாகாணமாக்கப்பட்ட மேற்கு பாகிஸ்தானின் பிரதம மந்திரியாகப் பதவி ஏற்றார்.

ருஷ்ய-பின்லந்து உறவு

பின்லந்தின் பகுதியான போர்க்கலாமீது தங்கள் ஒப்பந்த உரிமைகளை விட்டுவிடுவதாகவும், அங்குள்ள தங்கள் கடற்படைத் தளத்தைக் கலைத்துவிடுவதாகவும், பின்லந்தில் உள்ள தங்கள் துருப்புக்களைத் திருப்பி அழைத்துக்கொள்வதாகவும் ருஷ்ய அரசாங்கம் தெரிவித்தது. 1947-ஆம் வருஷ முதல், போர்க்கலா என்ற இடம் ருஷ்யர் வசம் இருந்து வருகிறது.

அர்ஜென்டினு

தென் அமெரிக்காவில் உள்ள அர்ஜென்டினு நாட்டில் ராணுவப் படையினர் செய்த கலகத்தின் காரணமாக அந்நாட்டு அரசாங்கம் வீழ்ச்சியடைந்தது. அர்ஜென்டினுவின் தலைவராக இருந்த பெரான், அருகிலுள்ள பராகுவே நாட்டுக்கு ஓடித் தஞ்சமடைந்தார். கலகத் தளபதி ஜெனரல் லோனர்டி புது அரசாங்கத்தை அமைத்தார். புதிய அரசாங்கத்தை அமெரிக்கா, பிரிட்டன், பராகுவே, இந்தியா முதலிய நாடுகள் அங்கீகரித்தன.

சைப்ரஸ்

சைப்ரஸ்-கிரீஸ் இணைப்பு இயக்கத் தலைவரான ஆர்ச் பிஷப் மகாரியோஸ், தமது போராட்டத்தைப் பலப்படுத்தப் போவதாகத் தெரிவித்தார். சைப்ரஸ் தீவு முழுவதும் சாத்வீகப் போர் ஆரம்பிக்கப்போவதாகவும் அந்தப் போட்டம் மிகத் தீவிரமாக இருக்குமாதலால் அரசாங்க நிர்வாகமே நிலை குலைந்து விடும் என்றும் கூறினர்.

"பிரிட்டன், துருக்கி, கிரீஸ் ஆகியவற்றின் முக்கூட்டு மகாநாடு லண்டனில் நடைபெற்றது. அதில் பலன் ஒன்றுமில்லை. இந்தப் பிரச்னையை விவாதிக்க ஐக்கிய நாடுகள் சபையும் மறுத்து விட்டது. எனவே சாத்வீகப் போராட்டம் தீவிரமாக நடைபெறும்" என்று மகாரி யோஸ் தெரிவித்தார்.

கொழும்பு மேயர்

கொழும்பு நகரசபை மேயர் பதவியிலிருந்து டாக்டர் என். எம். பெரேராவை நீக்க கொழும்பு நகரசபை முடிவு செய்தது. டாக்டர் பெரேரா இலங்கை சம சமாஜக் கட்சி யின் தலைவர். அவர் மேயராகி ஒரு வருஷம் ஆகிறது. அவரை விலக்க வேண்டுமென்று வாக்களித்த அங்கத் தினர் பதினாறு பேர். அவருக்குச் சாதகமாக இருந்த அங் கத்தினர் பதினான்குபேர்.

அல்ஜீரியா

ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டத்தில் அல்ஜீரியப் பிரச்னையை விவாதிப்பது சம்பந்தமாக விவாதம் நடை பெற்றது. அல்ஜீரியா பிரான்ஸ் தேசத்தின் ஒரு பகுதி என்றும், அதைப் பற்றி விவாதிக்க ஐக்கிய நாடுகள் சபைக்கு அதிகாரமில்லை என்றும் பிரான்ஸ் தேசப் பிரதி நிதி கூறினார். பிரிட்டனின் பிரதிநிதியும் அதை ஆத ரித்தார். ஆனால் ஆசிய - ஆப்பிரிக்க மகாநாட்டில் கலந்து கொண்ட தேசங்கள், அல்ஜீரியப் பிரச்னையை விவாதிக்க வேண்டுமென்று வற்புறுத்தின. வாக்கெடுப்பில், அல் ஜீரியப் பிரச்னையை விவாதிக்க வேண்டுமென்று தீர் மானிக்கப் பெற்றது. அதை ஆட்சேபித்து பிரான்ஸ் தேசப் பிரதிநிதிகள் ஐக்கிய நாடுகள் சபையிலிருந்து வெளியேறினர்.

இந்தோனேஷ்யா

இந்தோனேஷ்யா சுதந்திரமடைந்த பின் முதலாவது பொதுத் தேர்தல் நடைபெற்றது.

மலேயாவில் தமிழ்

மலேயா சர்வகலாசாலையில் தமிழ் கற்க சீக்கிரம் வசதி அளிக்கப்படும் என்று முதன் மந்திரி ஸ்ரீ டேவிட் மார்ஷல் கூறினர். மலேயாவில் உள்ள இந்தியர்களில் பெரும்பாலோரின் தாய் மொழி ஹிந்தி அல்ல என்றும் ஆகவே ஹிந்தியைக் கற்பிக்கும் பிரச்னை எழவில்லையென்றும் கூறினர்.

மத்திய கிழக்குப் பிரதேசங்கள்

ஈராக்-துருக்கி ராணுவ ஒப்பந்தத்தில் ஈரானும் கையெழுத்திட்டது. அதன் காரணமாக ஈரானுக்கு அமெரிக்காவிடமிருந்து ஏராளமாக பொருளுதவியும் ராணுவத் தளவாடங்களும் கிடைக்கும்.

அந்த ஒப்பந்தத்தில் ஈரான் சேருவதை ஆட்சேபித்து ருஷ்ய வெளிநாட்டு விவகார மந்திரி மாலடோவ் ஈரானுக்கு ஒரு குறிப்பு அனுப்பியிருக்கிறர். "மத்திய கிழக்கிலும் சமீப கிழக்கிலும் ராணுவக் கூட்டுக்களை ஏற்படுத்துவது ஒப்பந்தத்தின் நோக்கம். அது உலக அமைதியிலோ அல்லது பாதுகாப்பிலோ சிரத்தை இல்லாத நாடுகளின் கருவியாக அமைந்திருக்கிறது. இப் பிரதேசங்களில் அந்நியர் ஆட்சியை ஏற்படுத்துவதும் அதை நீடிப்பதும் தான் இத்தகைய கூட்டின் நோக்கமாகும்" என்று மாலடோவ் கூறினர்.

எகிப்து நாடு, ருஷ்யாவிலிருந்து ஏராளமான யுத்த சாதனங்களைப் பண்ட மாற்று முறையில் பெறச் சம்மதித்திருக்கிறது. சிரியாவும் அவ்வாறே செய்ய ஒப்புக்கொண்டிருக்கிறது.

எகிப்து நாடு தனது ஆயுத பலத்தைப் பெருக்கினல் தானும் அவ்வாறே செய்ய நேரும் என்று இஸ்ரேல் நாடு கூறுகிறது. ருஷ்யாவுக்குப் போட்டியாக, இஸ்ரேலுக்கு யுத்த சாதனங்களை இலவசமாக வழங்கவேண்டுமென்று அமெரிக்க சட்டசபை அங்கத்தினர் சிலர் கூறுகின்றனர்.

### இன ஒதுக்கல்

தென் ஆப்பிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கையைக் கண்டித்து பிரிட்டிஷ் தொழிற் கட்சி மகாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளார்கள். "இது ஒரு அபாயகரமான ஒழுக்கமற்ற சித்தாந்தம். இது ஐக்கிய நாடுகளின் சாசனக் கொள்கைகளுக்கும், காமன்வெல்த் நாடுகளின் கொள்கைகளுக்கும் பொருந்தாதவை. அது மட்டுமல்ல; ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பிரகடனத்தையே இது மீறுவதாகும். எனவே இந்த இன ஒதுக்கல் கொள்கையைப் பிரிட்டிஷ் அரசாங்கம் பலமாகக் கண்டிக்க வேண்டும்" என்று தீர்மானம் கூறுகிறது.

### கல்லூரி படிப்புத் திட்டம்

ஒரு வருஷம் பூர்வாங்கப் படிப்பு, மூன்று வருஷம் பட்டதாரிப் படிப்பு என்ற புதிய கல்லூரி படிப்புத் திட்டம் 1956-57-வது ஆண்டில் சென்னை ராஜ்யத்தில் ஆரம்பமாகும்.

எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையில் கல்லூரிப் படிப்புக்கான தகுதியுடன் தேறியவர்கள் மட்டுமே பூர்வாங்கப் படிப்புக்குச் சேரலாம்.

சர்வகலாசாலையுடன் இணைக்கப்பட்டுள்ள கல்லூரிகளில் பூர்வாங்கப் படிப்பு வகுப்புக்கள் நடைபெறும். படிப்புக் காலம் ஒரு வருஷம்-165 பள்ளிக்கூட நாட்கள்.

பாடத் திட்டத்தில் இரண்டு பாகங்கள் உண்டு. முதல் பாகம் மொழிகளைப் பற்றியது. இரண்டாவது பாகம் மற்ற பாடங்களைப் பற்றியது.

முதல் பாகத்தில் ஆங்கிலம் கட்டாயம். பிரதேச மொழி, வேறு இந்திய மொழி, புராதன மொழி, அந்நிய மொழி ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றைப் படிக்க வேண்டும். பிறருடைய உதவியில்லாமல் அந்த மொழிகளில் தடங்கலின்றிப் பேசவும், இலக்கணப் பிழை இல்லாமல் எழுதவும் தகுதி பெற வேண்டும்.

இரண்டாவது பாகத்தில் இரண்டு பிரிவுகள் உண்டு. ஒவ்வொரு பிரிவிலும் இரண்டு இஷ்ட பாடங்களை எடுத்துக் கொள்ளவேண்டும்.

முதல் பிரிவில் கணிதம், விஞ்ஞான வகைகள், ஆதார கணிதம் முதலியன.

இரண்டாவது பிரிவில், உலக சரித்திரம், பூகோளம், வியாபாரம், தர்க்கம், மனோதத்துவம், ஒரு மொழியில் தீவிரப் படிப்பு ஆகியவை உண்டு.

பி. ஏ. படிப்பதில், எந்தப் பிரிவிலும் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு எவருக்கும் தடையிருக்காது.

சரிபாதி நிகர வாரம்

நிகர மகசூலை நிலக்காரரும் சாகுபடியாளரும் சரி பாதி பங்கிட்டுக் கொள்வது என்ற அடிப்படையில் நியாய-வாரச் சட்டத்தை இயற்றுவது என்று சென்னை ராஜ்ய அரசாங்கத்தார் முடிவு செய்திருக்கிறார்கள்.

மலபார் நீங்கலாக, ஆனல் தஞ்சாவூர் உள்பட எல்லா ஜில்லாக்களுக்கும் இந்த ஏற்பாடு.

சாகுபடிச் செலவு, தீர்வை, மற்ற வரிகள் ஆகியவற்றை மொத்த மகசூலின் மதிப்பிலிருந்து கழித்து,

மிச்சமுள்ளதை நிலக்காரரும் சாகுபடியாளரும் சரிபாதி பங்கிட்டுக் கொள்ளவேண்டும் என்பது அரசாங்கத்தின் திட்டம். இதற்கான மசோதாவை அரசாங்கம் தயாரித்து வருகிறது.

தேசப்படப் புத்தகம்

இந்திய தேசப்படப் புத்தகம் (அட்லாஸ்) தயாரிக்க இயந்திர சாதனங்களுடன் கூடிய, படம் வரையும் காரியாலயம் ஒன்றை இந்திய அரசாங்கம் அமைத்து வருகிறது.

நாட்டின் பூகோள அமைப்பு, சமூக, பொருளாதார அமைப்புகள் ஆகியவற்றைச் சித்திரிக்கும் வகையில், இந்திய தேசப்படப் புத்தகங்கள் 1960-ஆம் ஆண்டுக்குள் தயாரிக்கப் பெறும்.

யோகாசனப் பயிற்சி

சென்னை ராஜ்யத்திலுள்ள பள்ளி மாணவர்களுக்கு யோகாசனப் பயிற்சி அளிப்பதற்காக சென்னை அரசாங்கம் ஒரு திட்டம் தயாரித்து வருகிறது. இது முதலில் சென்னை நகரில் உள்ள பள்ளிக்கூடங்களில் அமுலுக்கு வரும். பின்னர் ராஜ்யத்திலுள்ள எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் நடைமுறையில் வரும். யோகாசனம் கற்பிக்கும் ஸ்தாபனங்களுக்கு அரசாங்கம் உதவி செய்யும் என்று சென்னை ராஜ்ய கல்வி மந்திரி தெரிவித்தார்.

ஸ்ரீமதி செல்லம்மாள் பாரதி

கவி சுப்பிரமணிய பாரதியாரின் மனைவி ஸ்ரீமதி செல்லம்மாள் கடயம் என்ற ஊரில் காலமானார். ஸ்ரீமதி செல்லம்மாள் தமது ஏழாவது வயதில் பாரதியாரை மணந்தார். அப்பொழுது பாரதியாருக்கு வயது பதினன்கு. பாரதியார் புதுச்சேரியில் இருந்தபொழுதெல்லாம், செல்லம்மாளும் கூடவே இருந்தார். ஸ்ரீமதி செல்லம்

மாளின் தியாகத்தினுலும் ஒத்துழைப்பினுலும்தான் பாரதியார் புதுச்சேரியில் தமது கஷ்டமான வாழ்க் கையை நடத்த முடிந்தது. தமது மனைவியைப் பாராட்டி பாரதியார் பல பாடல்களைப் புனைந்துள்ளார். செல்லம் மாள் என்ற பெயர் கண்ணம்மா என்று மாற்றப் பட்டு, இப்பாடல்கள் கண்ணன் பாட்டில் சேர்க்கப் பெற்றன.

ரயில் பெட்டித் தொழிற்சாலை

பெரம்பூர் ரயில் பெட்டித் தொழிற்சாலையில், பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேரு, உற்பத்தியை ஆரம்பித்து வைத்தார்.

ராஜ்ய சீரமைப்புக் கமிஷன்

ராஜ்ய சீரமைப்புக் கமிஷனின் யாதாஸ்து உத்தி யோகபூர்வமாக வெளியிடப் பெற்றது.

இந்தியா சுதந்திரம் அடைந்தபின் உதிரியாக இருந்த அறுநூற்றுச் சொச்சம் சுதேச சமஸ்தானங்கள் ஒன்ருக இணைக்கப்பட்டு இருபத்தேழு ராஜ்யங்களாக அமைக்கப் பெற்றிருக்கின்றன. கமிஷனின் சிபாரிசு களின் பலனாக இந்த இருபத்தேழு ராஜ்யங்கள் பதினாறு ராஜ்யங்களாக மாற்றியமைக்கப் பெறலாம். இதைத் தவிர மூன்று மத்திய நிர்வாகப் பிரதேசங்கள் இருக்கலாம்.

கமிஷன் செய்துள்ள மாறுதல்களின்படி சென்னை ராஜ்யம் தமிழ் ராஜ்யமாகி விடும். திருவாங்கூர்-கொச்சி யிலுள்ள அகஸ்தீசுவரம் தாலூகா சென்னை ராஜ்யத்தில் சேருவதால், கன்னியா குமரி சென்னை ராஜ்யத்தின் தென் கோடி எல்லையாகும்.

கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள கொள்ளேகாலம் தாலூகா பூராவும், கமிஷனின் சிபாரிசுகளின்படி, புது கர் நாடக ராஜ்யத்தைச் சேரும். தென் கன்னட ஜில்லாவும் கர்நாடகத்தையே சேரும்.

சென்னை ராஜ்யத்திலுள்ள மலபார் ஜில்லா திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்தைச் சேரும். திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்திலுள்ள தமிழர்கள் வாழும் ஐந்து தாலூகாக்கள்-அகஸ்தீசுவரம், தோவாளை, கல்குளம், விளவங்கோடு, செங்கோட்டை-ஆகியவை சென்னை ராஜ்யத்தில் சேரும்.

சென்னை நகரம், சென்னை ராஜ்யத்துக்கே சொந்தம்.

கமிஷன் சிபாரிசு செய்துள்ளபடி புதிய ராஜ்யங்கள் பதினாறு.

| | |
|---|---|
| 1. சென்னை | 2. கேரளம் |
| 3. கர்நாடகம் | 4. ஹைதராபாத் |
| 5. ஆந்திரா | 6. பம்பாய் |
| 7. விதர்ப்பம் | 8. மத்தியப் பிரதேசம் |
| 9. ராஜஸ்தான் | 10. பஞ்சாப் |
| 11. உத்தரப் பிரதேம் | 12. பீகார் |
| 13. மேற்கு வங்காளம் | 14. அஸ்ஸாம் |
| 15. ஒரிஸ்ஸா | 16. ஜம்மு-காஷ்மீர் |

பம்பாய் மாகாணத்தில், சௌராஷ்டிரா கட்சுப் பகுதிகள் சேர்ந்து விடும்.

டில்லி, மணிப்பூர், அந்தமான் தீவு முதலியவை மத்திய நிர்வாகப் பிரதேசங்கள்.

ஹைதராபாத்தின் மராத்திப் பகுதி பம்பாய்க்கும், கன்னடப் பகுதி கர்நாடகத்துக்கும் சேர்ந்துவிடும். தெலிங்கானு மட்டும் 1961-ஆம் ஆண்டு வரை தனி ஹைதராபாத் ராஜ்யமாக இருக்கும். பின்னர் ஆந்திராவும் ஹைதராபாத்தும் விரும்பினால் ஒரே ராஜ்யமாக இணைந்து விடலாம்.

மத்தியப் பிரதேசத்தின் மராத்திப் பகுதி, தனி விதர்ப்ப ராஜ்யமாகும்.

விந்தியப் பிரதேசம், மத்திய பாரதம், போபால் முதலியவை மத்தியப் பிரதேசத்தில் சேர்ந்து விடும்.

பெப்சு, ஹிமாசலப் பிரதேச் ராஜ்யங்கள் பஞ்சாபில் இணைந்துவிடும்.

பீகாரில் இரண்டு ஜில்லாக்கள் மேற்கு வங்காளத்தைச் சேரும்.

இந்த ராஜ்ய சீரமைப்புக் கமிஷனின் அங்கத்தினர் மூவர். அவர்கள் ஸ்ரீ பஸல் அலி, சர்தார் கே. எம். பணிக்கர், பண்டித ஹிருதயநாத் குன்ஸ்ரூ.

தேச ஐக்கிய உணர்ச்சி வளருவதற்கு ஒவ்வொரு ராஜ்யத்திலும் பெரிய பதவிகளில் பாதிப்பேர் பிற ராஜ்யங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டுமென்று கமிஷன் சிபார்சு செய்திருக்கிறது.

தென்னிந்திய மொழிகளை வட ராஜ்யங்களில் கற்பிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்றும், உஸ்மானியா சர்வகலாசாலையை மத்திய அரசாங்க நிர்வாகத்தில் கொண்டு வருவதுடன் தெற்கே மற்றுமொரு மத்திய அரசாங்க சர்வகலாசாலை ஏற்படுத்த வேண்டுமென்றும், தேச மெங்கும் எல்லா மக்களுக்கும் சமவுரிமை வசதிகள் இருக்கவேண்டுமென்றும் கமிஷன் சிபார்சு செய்திருக்கிறது.

Edited, Printed and Published by A. K. CHETTIAR at
Kumari Malar Press, 100, Mowbrays Road, Madras-18

ஆசிரியரின் புதிய பிரயாண நூல்கள் :

(2) அமெரிக்க நாட்டில்

●

(3) கரிபியன் கடலும் கயானவும்

●

(4) ஐரோப்பா வழியாக

விரைவில் வெளிவரும்

போன்: 26 தந்தி: BONTEX

# P. R. நாராயணசாமி ஐயர்

ஜவுளி வியாபாரம்

பெரிய கடைத் தெரு : திருச்சினுப்பள்ளி

தங்களுக்குத் தேவையான எல்லா வித ஜவுளி தினுசுகளும் எங்களிடம் கிடைக்கும்.

எங்கள் ஒரு விலைக் கொள்கை தாங்கள் போற்றத் தக்கதே.

எங்கள் கிளை :

பேன்ஸி ஹால்

(FANCY HALL)

சைனு பஜார்—திருச்சி

போன்: 165

பி. ஆர். நாராயணசாமி ஐயர் : திருச்சினுப்பள்ளி